# மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# பொதுத்தமிழ் -- கற்றல் கையேடு

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

பொதுத்தமிழ் – கற்றல் கையேடு

அன்பான முதுகலைத் தமிழாசிரியர்களுக்கு,

இந்த கற்றல் கையேடு,மெல்லக் கற்கும் மாணவர்களும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தமிழ்ப் பாடத்தில் எளிய முறையில் தேர்ச்சி பெறும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

1.தமிழ்ப் பாடநூலில் உள்ள எட்டு இயல்களில் முதல் நான்கு இயல்களை வரிக்குவரி முழுமையாக (அகநிலை மற்றும் புறநிலை வினாக்களைப் படித்தாலே வெற்றி பெறுவது உறுதி. வினாத்தாள்

வடிவமைப்பில் செய்யுள், உரைநடை பகுதிகளில் இருந்து பதிநான்கு (14x1=14அதாவது6+8=14) ஒரு மதிப்பெண் வினாக்கள் கேட்கப்படுகின்றன. அவற்றிற்கு விடை எழுதும் வகையில் முதல் நான்கு இயல்களில் இருந்து அகநிலை மற்றும் புறநிலை வினாக்களும் மற்ற நான்கு இயல்களில் உள்ள புத்தகப் புறநிலை ஒரு மதிப்பெண் வினா விடைகளும் அமையும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

2. இரண்டு மதிப்பெண்கள் ( இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சி)

அனைத்து இயல்கள் வினாவிடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் அமைப்பில் இப்பகுதியில் 7x2=14 மதிப்பெண்கள் உள்ளன.

3. அணி இலக்கணம் அல்லது திணை, துறைக்காக நான்கு மதிப்பெணகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குரிய விடைகள் எளிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. (1x4=4)

4. மொழிபெயர்ப்பு அல்லது இலக்கிய நயம் பாராட்டல் பகுதியில் நான்கு மதிப்பெண்கள் (1x4=4) பெறும் வகையில் பயிற்சிகள் தரப்பட்டுள்ளது.

5.மனப்பாடப் பாடல் மற்றும் திருக்குறள் 6 மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது (4+2)

6.அனைத்து மனப்பாடப்பாடல்களையும் திருக்குறள்களையும் திரும்ப திரும்ப படித்து எழுதிப் பார்ப்பதன் மூலம் 6- மதிப்பெண்கள் பெறமுடியும்

7. முதல் நான்கு இயல்களில் இருந்து ( நெடுவினாக்கள் பகுதியில்) இரண்டு வினாக்கள் கேட்கப்படலாம். எனவே அவற்றிற்குரிய விடைகளை, விடைக்குறிப்பு அடிப்படையில் எளிமைபடுத்தி வழங்கப்பட்டுள்ளது.

8. மேற்கண்ட வினா- விடைகளைப் பயிற்சி பெறும் வகையில் 16 அலகுத் தேர்வு வினாத்தாட்கள் அமைந்துள்ளன.

பதினாறு அலகுத் தேர்வுகளையும் வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒன்று என்று மாணவர்களுக்கு வழங்கி அவற்றின் விடைகளைப் படித்து வரச் செய்து வகுப்பறையில் அல்லது சிறப்பு வகுப்புகளில் பயிற்சி அளித்தால் வெற்றி பெறுவது எளிது.

நன்றாக படிக்கும் மாணவர்களுக்கு இக்கற்றல் கையேட்டுடன் புத்தகத்தில் உள்ள மற்ற வினா- விடைகளையும் படிக்கச் செய்யும்பொழுது அவர்களும் கூடுதலாக மதிப்பெண்கள் பெறமுடியும்.

**வகுப்பு : 12** **பாடம் : தமிழ்**

# ஒரு மதிப்பெண் வினாக்கள்:

## I. பலவுள் தெரிக.

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்**

   **அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்**

   **இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்**

   **விடை: இ) தொல்காப்பியம்**

2. "மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்

   அ) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

   ஆ) பொதிகையில் தோன்றியது

   இ) வள்ளல்களைத் தந்தது

   1) அ மட்டும் சரி 3) இ மட்டும் சரி

   2) அ, ஆ இரண்டும் சரி 4) அ, இ மட்டும் சரி

   **விடை: 4)அ,இ மட்டும் சரி**

3. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னோர் இலாத தமிழ்" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்.

   அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

   இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர் எதுகை, அடிமோனை

   **விடை: இ)அடிஎதுகை, சீர்மோனை**

4. கருத்து : 1. இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.

   கருத்து : 2. தொடரமைப்பு , சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

   இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி 2 தவறு

   **விடை :இ) இரண்டு கருத்தும் சரி**

5. பொருத்துக.

   அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு. நெல்லையப்பர்

   ஆ) நிலவுப்பூ - 2) தி. சு. நடராசன்

   இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்

   ஈ) உய்யும் வழி - 4) கி. ராஜநாராயணன்

அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1

**விடை : ஈ) 2,3,4,1**

6. தமிழில் திணைப்பாகுபாடு …………… அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற் குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக் குறிப்பு

**விடை: அ) பொருட்குறிப்பு**

7. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூல் இடம்பெற்ற இலக்கண நூல் ……..

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

**விடை: இ) தொல்காப்பியம்**

8. யார் ? எது ? ஆகிய வினாச்சொற்கள் பயனிலை அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே….

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

**விடை: ஆ) உயர்திணை, அஃறிணை**

9. பொருத்தி விடை தேர்க.

அ) அவன் அவள் அவர் - 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) நாம் முயற்சி செய்வோம் - 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ) நாங்கள், நாம் - 4) பதிலிடு பெயர்கள்.

அ) 4,1,2,3 ஆ) 2,3,4,1 இ) 3,4,1,2 ஈ) 4,3,1,2

**விடை: அ) 4,1,2,3**

10. பொருத்துக : -

அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன

ஆ) பசுக்கள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன

இ) பறவைகள் - 3) குளிரால் ஒடுங்கின

ஈ) விலங்குகள் - 4) மேய்ச்சலை மறந்தன

அ) 1,3,4,2 ஆ) 3,1,4,2 இ) 3,2,1,4 ஈ) 3,1,2,4

**விடை: ஈ) 3,1,2,4**

11. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

**விடை: இ) மழைத்துளிகள்**

12. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

**விடை: ஆ) மணல் அள்ளுதல்**

13. **பொய்யா** வானம் புதுப்பெயல் பொழிந்தென – தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**விடை: ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

14. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுக்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது

ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

இ) காலநிலை மாறுபடுகிறது

ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது

**விடை : அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது**

15. செம்பரிதி – என்பதன் பொருள்

அ) சிவந்த சூரியன் ஆ) சிவந்த சந்திரன் இ) சிவந்த வானம் ஈ) சிவந்த மனிதன்

**விடை: அ) சிவந்த சூரியன்**

16. செம்பரிதி - பிரித்து எழுதுக.

அ) செம் + பரிதி ஆ) செம்மை+பரிதி இ) செம் + மை + பரிதி ஈ) செம் + பரிதி

**விடை: ஆ) செம்மை+பரிதி**

17. கூண்டதனை உடைத்தெழுந்த ………..

அ) புலி ஆ) யானை இ) சிங்கம் ஈ) சிறுத்தை

**விடை: இ) சிங்கம்**

18. கவிஞர் சிற்பியின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல் ……

அ) ஒளிப்பறவை ஆ) சர்ப்பயாகம் இ) சூரிய நிழல் ஈ) ஒரு கிராமத்து நதி

**விடை: ஈ) ஒரு கிராமத்து நதி**

19. இரண்டு முறை சாகித்ய அகாதமி விருதுபெற்றவர்

அ) அகிலன் ஆ) பிரபஞ்சன் இ) சிற்பி ஈ) சுரதா

**விடை: இ) சிற்பி**

20. கவிஞர் சிற்பி தமிழ்த்துறைத்தலைவராகப் பணியாற்றிய பல்கலைக் கழகம்

அ) சென்னைப் பல்கலைக்கழகம் ஆ) பாரதிதாசன் பல்கலைக்கழகம்

இ) பெரியார் பல்கலைக்கழகம் ஈ) பாரதியார் பல்கலைக் கழகம்

**விடை: ஈ) பாரதியார் பல்கலைக் கழகம்**

21. சாகித்ய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராக இருந்தவர்

அ) சிற்பி ஆ) தி. சு. நடராசன் இ) அய்யப்ப மாதவன் ஈ) உத்தமசோழன்

**விடை: அ) சிற்பி**

22. அழகியல் உருவாக தளம் அமைத்த நூல்

அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) புறநானூறு

**விடை: இ) தொல்காப்பியம்**

23. கவிதையின் இயங்காற்றல் தான் ………..

அ) நடை ஆ) சொல் இ) பொருள் ஈ) அணி

**விடை: அ) நடை**

24. சங்கப்பாடல்களின் முக்கியமான ஒரு பண்பு ……………

அ) சொற்புலம் ஆ) தொடரியல் இ) ஒலிக்கோலம் ஈ) மொழிசார்கலை

**விடை: இ) ஒலிக்கோலம்**

25. ‘ கிடை’ என்னும் குறுநாவலின் ஆசிரியர் ………….

அ) தி.சு. நடராசன் ஆ) அய்யப்பமாதவன்

இ) சிற்பி ஈ) கி. ராஜநாராயணன்

**விடை: ஈ) கி. ராஜநாராயணன்**

26. எவை சரியானவை ?

i. சங்க இலக்கியம், அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற்பொருளாக வடிவமைத்துள்ளது.

ii. தொல்காப்பியம் புணர்தல், முதலான அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள் அறம் ஆகிய அறவியல் ‘லட்சியப்’ பொருள்களோடு இரண்டற இணைந்து விடுகின்றது.

அ). 1 மட்டும் சரி ஆ). 1, 2 இரண்டும் சரி

இ). 2 மட்டும் சரி ஈ). 1, 2 இரண்டும் தவறு

**விடை: ஆ). 1, 2 இரண்டும் சரி**

27. 1963 – ல் வெளிவந்த சிற்பி. பாலசுப்பிரமணியத்தின் முதல் கவிதைத் தொகுப்பு :

அ) ஒளிப்பறவை ஆ) நிலவுப்பூ இ) ஒரு கிராமத்து நதி ஈ) சூரிய நிழல்

**விடை: ஆ) நிலவுப்பூ**

28. நம் பண்பாட்டின் நீட்சி ……..

அ) கவிதை ஆ) காப்பியம் இ) இசை ஈ) தமிழ்மொழி

**விடை: ஈ) தமிழ்மொழி**

29. மலைமேட்டில் தலையைச் சாய்ப்பவன்

அ) செம்பரிதி ஆ) செந்நிறப்பூக்காடு இ) தொழிலாளர் ஈ) சிங்கம்

**விடை: அ) செம்பரிதி**

30. ‘ தமிழ் அழகியல்’ – என்ற நூலை எழுதியவர் ……..

அ) தி. சு. நடராசன் ஆ) கி. ராஜநாராயணன்

இ) பாரதியார் ஈ) சிற்பி பாலசுப்பிரமணியம்

**விடை: அ) தி. சு. நடராசன்**

31. எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகக் கருதும் நூல்….

அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) தண்டியலங்காரம் ஈ) அணியிலக்கணம்

**விடை: ஆ) தொல்காப்பியம்**

32. மொழிசார் கலை என்பது ………..

அ) நடனம் ஆ) நாடகம் இ) இலக்கியம் ஈ) தத்துவம்

**விடை: இ) இலக்கியம்**

33. ‘ நீர்படு பசுங்கலம் ’ என்பது

அ) தொடர் மொழி ஆ) தனிமொழி இ) தொகைமொழி ஈ) பொதுமொழி

**விடை: இ) தொகைமொழி**

34. ‘ தொகை மொழி ’ பற்றித் தொல்காப்பியத்தின் இயல் ………… பேசுகிறது.

அ) எச்சவியல் ஆ) புணரியல் இ) எழுத்தியல் ஈ) உருபனியல்

**விடை: அ) எச்சவியல்**

35. அணி இலக்கணத்தைக் கூறும் சிறப்பாடை நூல்களில் ஒன்று

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) தண்டியலங்காரம் ஈ) வீரசோழியம்

**விடை: இ) தண்டியலங்காரம்**

36. ‘ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி’ – என்னும் பாடல் இடம் பெற்றுள்ள பகுதி

அ) உவமையணியியல் ஆ) பொருளணியியல்

இ) சொல்லணியியல் ஈ) பொதுவியல்

**விடை: ஆ) பொருளணியியல்**

37. தண்டியலங்காரம் ……………… பெரும் பிரிவுகளை உடையது.

அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு ஈ) பத்து

**விடை: அ) மூன்று**

38. ‘ ஓங்கல் ’ என்பதன் பொருள் : -

அ) ஒருவித ஓசை ஆ) உயர்ந்தமலை இ) சான்றோர் ஈ) உலகம்

**விடை: ஆ) உயர்ந்தமலை**

39. 'உயர்ந்தோர்' என்பதன் இலக்கணம் குறிப்பு :

அ) வினைமுற்று ஆ) வினையாலணையும் பெயர்

இ) பெயர்ச்சொல் ஈ) இடப்பெயர்

**விடை: ஆ) வினையாலணையும் பெயர்**

40. ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி – என்ற பாடலில் பயின்று வருவது

அ) நேரிசை வெண்பா ஆ) நேரிசை வெண்பா

இ) இன்னிசை வெண்பா ஈ) பஃறொடை வெண்பா

**விடை: ஆ) வினையாலணையும் பெயர்**

41. ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி என்ற பாடலில் பயின்று வரும் அணி ……

அ) உருவக அணி ஆ) வேற்றுப்பொருள் வைப்பணி

இ) ஏகதேச உருவக அணி ஈ) பொருள் வேற்றுமை அணி

**விடை: ஈ) பொருள் வேற்றுமை அணி**

42. 'பாரதி கடிதங்கள்' – நூலில் இடம்பெற்றுள்ள முதல் கடிதம் …… எழுதியது.

அ) நெல்லையப்பருக்கு ஆ) எட்டயபுரம் அரசருக்கு

இ) தம்பிமார்களுக்கு ஈ) தமிழுக்கு

**விடை: ஆ) எட்டயபுரம் அரசருக்கு**

43. எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றி 'வம்சமணி தீபிகை' என்னும் நூலை எழுதியவர்

அ) பாரதியார் ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்

இ) பத்மநாபன் ஈ) பரலி சு. நெல்லையப்பர்

**விடை: ஆ) கவிகேசரி சாமி தீட்சிதா**

44. 'வம்சமணி தீபிகை' என்னும் நூலை வெளியிட்ட ஆண்டு …………

அ) 1880 ஆ) 1879 இ) 1875 ஈ) 1872

**விடை: ஆ) 1879**

45. 'வம்சமணி தீபிகை' என்னும் நூலின் பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசை கொண்டவர் …….

அ) பாரதியார் ஆ) நெல்லையப்பர்

இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) இளசைமணி

**விடை: அ) பாரதியார்**

46. ‘வம்சமணி தீபிகை’ நூலின் மூல வடிவத்தை மறுபதிப்பாக 2008 – ல் அப்படியே வெளியிட்டவர்…

அ) பாரதியார் ஆ) பத்மநாபன் இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) இளசைமணி

**விடை: இ) கவிகேசரி சாமி தீட்சிதர்**

47. லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றியவர் ……….

அ) இளசைமணி ஆ) பரலி சு. நெல்லையப்பர்

இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) ரா. அ. பத்மநாபன்

**விடை: ஆ) பரலி சு. நெல்லையப்பர்**

48. வ. உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் ……..

அ) இளசை மணி ஆ) பரலி சு. நெல்லையப்பர்

இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) ரா. அ. பத்மநாபன்

**விடை:ஆ) பரலி சு. நெல்லையப்பர்**

49. “கைப்பொருள் அற்றான் கற்ப தெவ்வகை” ? இவ்வரிகள் பாரதியார் யாருக்கு எழுதிய கடிதத்தில் இடம்பெற்றுள்ளது

அ) குத்திகேசவருக்கு ஆ) ரா. அ. பத்மநாபனுக்கு

இ) நெல்லையப்பருக்கு ஈ) எட்டயபுர ஜமீனுக்கு

**விடை: ஈ)எட்டயபுர ஜமீனுக்கு**

50. பொருள் வேறுபாட்டினை …….. எழுத வேண்டும்.

அ) பொருளறிந்து ஆ) கருத்தை அறிந்து இ) சொல்லறிந்து ஈ) இடமறிந்து

**விடை: ஈ) இடமறிந்து**

51. சொல்லின் தொடக்கமாக மட்டுமே வருவது.

அ) நகரம் ஆ) னகரம் இ) ணகரம் ஈ) னாகாரம்

**விடை:அ) நகரம்**

52. தனிக்குறிலை அடுத்து வராத ஒற்றுகள் ………

அ) ட், ற் ஆ) க், ச் இ) ப், ய் ஈ) ர், ழ்

**விடை:ஈ) ர், ழ்**

53. (i) உயிர்வரின் **ஒரு** என்பது **ஓர்** என மாறும்

(ii) உயிர்வரின் **அது** என்பது **அ.்.து** என மாறும்

அ) (i) சரி (ii) தவறு ஆ) (i) தவறு (ii) தவறு

இ) (i) மற்றும் (ii) இரண்டும் தவறு ஈ) (i) மற்றும் (ii) இரண்டும் சரி

**விடை: ஈ) (i) மற்றும் (ii) இரண்டும் சரி**

54. ஆண்டுதோறும் உலகப்புவி நாள் கொண்டாடப்படுவது.

அ) ஏப்ரல் 22 ஆ) நவம்பர் 7 இ) நவம்பர் 30 ஈ) மே 14

**விடை:அ) ஏப்ரல் 22**

55. புயல், பெருமழை, பெருவெள்ளம் ஏற்படக் காரணம் ………..

அ) பெருநகர அமைப்பு இல்லை ஆ) சரியான திட்டமிடல் இன்மை

இ) இயற்கை சமநிலை இழத்தல் ஈ) மேலாண்மைத் துறையின் கவனக்குறைவு

**விடை: இ) இயற்கை சமநிலை இழத்தல்**

56. உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழ்வதற்கான உணவுச்சங்கிலியே …. எனப்படும்

அ) புவி வெப்பமாதல் ஆ) பசுமைப்புரட்சி

இ) இயற்கைச் சமநிலை ஈ) காலநிலை மாறுதல்

**விடை: இ) இயற்கைச் சமநிலை**

57. ‘புவி வெப்பமடைதல், மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே எனக் கூறியவர்

அ) வில்லியம் மேவல் ஆ) டேவிட் கிங் இ) லிட்டில் வுட் ஈ) ஈ. டீ. பெல்

**விடை: ஆ) டேவிட் கிங்**

58. இந்திய வானிலை ஆய்வுத்துறையினர், புவிவெப்ப ஆண்டாக அறிவித்தது ……..

அ)2009 ஆ) 1992 இ) 2005 ஈ) 2010

**விடை:அ) 2009**

59. நடுவண் அரசு, தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

அ) 2005 ஏப்ரல் 22 ஆ) 2010 டிசம்பர் 22 இ) 2005 டிசம்பர் 23 ஈ) 2010 சூன் 5

**விடை: இ) 2005 டிசம்பர் 23**

60. ஆண்டுதோறும் உலகச் சுற்றுச்சூழல் நாள் கொண்டாப்படுவது ……..

அ) ஜூன் 5 ஆ) ஜூலை 15 இ) ஆகஸ்டு 26 ஈ) நவம்பர் 14

**விடை:அ) ஜூன் 5**

61. கூற்று : 1. மனிதன், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதால், புவி வெப்பமடைகிறது.

கூற்று : 2. பருவநிலை மாற்றத்தால் புயல், பெருமழை ஆகியவை ஏற்படுகின்றன.

அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி இ) இரண்டும் சரி ஈ) இரண்டுமில்லை

**விடை:ஆ) 2 மட்டும் சரி**

62. கூற்று : 1. உயிரினங்கள் அனைத்தும், ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன.

கூற்று : 2. சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனமே, புயல்களுக்குப் பெயர் வைக்கிறது.

அ) 1 மட்டும் சரி ஆ) 2 மட்டும் சரி இ) இரண்டும் சரி ஈ) இரண்டுமில்லை

**விடை: இ) இரண்டும் சரி**

63. தவறான கூற்றைக் கண்டறிக.

அ) பேரிடரால் வேளாண் தொழில் இழப்புகளைச் சந்திக்கிறது.

ஆ) பேரிடர் நிகழும்போது மேலாண்மை ஆணையம் மட்டுமே உதவுகிறது.

அ) 1 மட்டும் தவறு ஆ) 2 மட்டும் தவறு இ) இரண்டும் தவறு ஈ) இரண்டுமில்லை

**விடை: ஆ) 2 மட்டும் தவறு**

64. பொருத்துக

அ) தமிழ் அழகியல் - 1. அகிலன்

ஆ) காட்டு வாத்து - 2. ந. பிச்சமூர்த்தி

இ) சுவரொட்டிகள் - 3. தி. சு. நடராசன்

ஈ) நெல்லூர் அரிசி - 4. ந. முத்துசாமி

அ) 1 2 3 4 ஆ 4 3 2 1 இ) 3 2 4 1 ஈ) 2 3 4 1

**விடை: இ) 3 2 4 1**

65. பெண்ணை அடைத்தவன் ……….. அடைத்தான்

அ) மண்ணை ஆ) விண்ணை இ) கண்ணை ஈ) பொன்னை

இ) கண்ணை

66. ‘இன்று’ என்ற கவிதை குறும்படத்தை வெளியிட்டவர்

அ) பாரதியார் ஆ) அய்யப்பமாதவன் இ) செல்வராஜ் ஈ) அகத்தியன்

**விடை: ஆ) அய்யப்பமாதவன்**

67. நீர்வெளி, மழைக்குப்பிறகும் மழை, நானென்பது வேறொருவன் - என்ற கவிதை நூல்களை வெளியிட்டவர்.

அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) தி. சு. நடராசன்

இ) ந. பிச்சமூர்த்தி ஈ) அய்யப்ப மாதவன்

**விடை:ஈ) அய்யப்ப மாதவன்**

68. காய்கிறது நனைந்திருந்த ………….

அ) வெளிச்சம் ஆ) ஆடை இ) பூமி ஈ) உடல்

**விடை:அ) வெளிச்சம்**

69. புதுப்பெயல் - இலக்கணக் குறிப்பு தருக.

அ) வினைத்தொகை ஆ) உவமைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை

**விடை:இ) பண்புத்தொகை**

70. பொருத்துக.

அ) ஆர்கலி - 1. தலையில் சூடும் மாலை

ஆ) புலம்பு - 2. கன்னம்

இ) கவுள் - 3. வெள்ளம்

ஈ) கண்ணி - 4. தனிமை

அ) 1 2 3 4 ஆ) 2 3 4 1 இ) 4 3 2 1 ஈ) 4 3 1 2

**விடை: ஈ) 4 3 1 2**

71. அய்யப்ப மாதவனின் கவிதைக் குறும்படம்

அ) அறம் ஆ) இன்று இ) அன்று ஈ) பிறகொருநாள்

**விடை:ஆ) இன்று**

72. பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல் …….

அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) நெடுநல்வாடை ஈ) பதிற்றுப்பத்து

**விடை: இ) நெடுநல்வாடை**

73. நெடுநல்வாடை ……… நூல்களுள் ஒன்று

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு இ) பதினெண்கீழ்கணக்கு ஈ) ஐம்பெருங்காப்பியம்

**விடை:ஆ) பத்துப்பாட்டு**

74. தலைவனைப் பிரிந்த தலைவிக்கு ……. ஆகவும், போர்ப்பாசறையில் இருக்கும் தலைவனுக்கு …… ஆகவும் நெடுநல்வாடை அமைந்துள்ளது.

அ) நல்வாடை, நெடுவாடை ஆ) நெடுநல்வாடை இ) நெடுவாடை ஈ) நெடுவாடை, நல்வாடை

**விடை:ஈ) நெடுவாடை, நல்வாடை**

75. நெடுநல்வாடை நூலின் அடிகள்

அ) 185 ஆ) 189 இ) 188 ஈ) 186

**விடை: இ) 188**

76. ஐப்பசி …….! கார்த்திகை …….! என்பது சொலவடை

அ) கனமழை, அடைமழை ஆ) அடைமழை, கனமழை

இ) குளிர்மழை, பனிமழை ஈ) அமில மழை, பனிமழை

**விடை:ஆ) அடைமழை, கனமழை**

77. ‘வளைஇ’ – என்பதன் இலக்கணக் குறிப்பு

அ) சொல்லிசை அளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை

இ) இன்னிசை அளபெடை ஈ) இசைநிறை அளபெடை

**விடை:அ) சொல்லிசை அளபெடை**

78. குன்று குளிர்பன்ன கூதிர்ப்பானாள் - இவ்வடியில் அமைந்துள்ள உவம உருபு

அ) குன்று ஆ) குளரி இ) அன்ன ஈ) கூதிர்

**விடை: ஈ) கூதிர்**

79. ‘ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்’ - இவ்வடியில் பண்புத்தொகை இடம்பெற்றுள்ளசொல்

அ) ஆர்கலி ஆ) முனைஇய இ) கொடுங்கோல் ஈ) கோவலர்

**விடை: இ) கொடுங்கோல்**

80. வெற்றிபெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியைக் கொண்டாடுவது ….. திணை

அ) வாகை ஆ) பொதுவியல் இ) பாடாண் ஈ) பெருந்திணை

**விடை: அ) வாகை**

81. ‘மாமேயல் மறப்ப மந்தி கூரம்’ - இவ்வடியில் ‘விலங்கு’ என்னும் பொருள் தரும் சொல் ?

அ) மா ஆ) மேயல் இ) மந்தி ஈ) கூர

**விடை:அ) மா**

82. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காய்கிறது நனைந்திருந்த வெளிச்சம்

ஆ) நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது

இ) வெயில் கண்ட பறவைகள், உற்சாகம் மீறிடச் சங்கீதம் இசைக்கின்றன.

ஈ) ஈரமான மரங்கள் மீதமான சொட்டுக்களைத் தலையசைத்து உதறுகிறது.

**விடை: ஈ) ஈரமான மரங்கள் மீதமான சொட்டுக்களைத் தலையசைத்து உதறுகிறது**

83. வெற்றியின் அடையாளமாகச் சூடுவது ……….

அ) காந்தள் பூ ஆ) கரந்தை பூ இ) வஞ்சிப் பூ ஈ) வாகைப் பூ

84. ஆர்கலி முனைஇய – அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு ………….

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) இசைநிறை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

**விடை: ஈ) சொல்லிசை அளபெடை**

85. ‘கலங்கி கோடல்’ என்பதில் ‘கலங்கி’ என்பது ………..

அ) வினைமுற்று ஆ) பெயரெச்சம் இ) வினையெச்சம் ஈ) தொழிற்பெயர்

**விடை: இ) வினையெச்சம்**

86. கீழ்க்கண்டவற்றுள் தொழிற்பெயர் எது ?

அ) பளிப்ப ஆ) பொய்யா இ) கோடல் ஈ) நலிய

**விடை: இ) கோடல்**

87. 'மவ்வீறு ஒற்றழிந்து உயரீறு ஒப்பவும் ஆகும்' – எனும் விதிப்படி புணரும் சொல் …………..

அ) வலனேர்பு ஆ) பொழிந்தன இ) இனநிரை ஈ) கண்ணீா்

**விடை: இ) இனநிரை**

88. 'இயல்பினும் விதியினும் நின்ற உயிா்முன் கசதப மிகும்' – என்னும் வதிப்படி புணா்ந்த சொல் ……

அ) மெய்க்கொள் ஆ) புதுப்பெயா் இ) குளிா்ப்பன்ன ஈ) கைக்கொள்

**விடை: ஈ) கைக்கொள்**

89. படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக - இவ்வரிகள் இடம் பெறும் நூல் எது ?

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) நற்றிணை ஈ) பதிற்றுப்பத்து

**விடை:ஆ) புறநானூறு**

90. நுந்தை தந்தைக்கு இவன் தந்தை

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) புறநானூறு ஈ) பரிபாடல்

**விடை: இ) புறநானூறு**

91. **இடு**க வொன்றோ, சுடுகவொன்றோ, படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே - இத்தொடா் இடம்பெறும் நூல் எது?

அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) நற்றிணை ஈ) பரிபாடல்

**விடை: அ) புறநானூறு**

92. புணரின் புணராது பொருளே; பொருள்வயின் பிரியின் புணராது புணா்வே - இத்தொடா் இடம்பெறும் நூல் எது ?

அ) புறநானூறு ஆ) நற்றிணை இ) பரிபாடல் ஈ) பதிற்றுப்பத்து

**விடை: ஆ) நற்றிணை**

93. உத்தமசோழன் என்ற பெயரைக் கொண்டவா்

அ) தி. சு. நடராசன் ஆ) அகுலன் இ) செல்வராஜ் ஈ) சிற்பி

**விடை:இ) செல்வராஜ்**

94. மனிதத்தீவுகள், குருவி மறந்த சீடு சிறுகதைகளை எழுதியவா்.

அ) பூமணி ஆ) பாரதியாா் இ) சி. மணி ஈ) உத்தமசோழன்

**விடை: இ) செல்வராஜ்**

95. தொலைதூர வெளிச்சம், கசக்கும் இனிமை, கனல்பூக்கள் புதினங்களின் ஆசிரியா்

அ) கல்கி ஆ) சுஜாதா இ) உத்தமசோழன் ஈ) பூமணி

**விடை: இ) உத்தமசோழன்**

96. கிழக்க வாசல் உதயம் என்ற திங்கள் இதழின் ஆசிரியர்

அ) பாரதியார் ஆ) உத்தமசோழன் இ) பாரதிதாசன் ஈ) கண்ணதாசன்

**விடை:ஆ) உத்தமசோழன்**

97. இலக்கியத்தின் நோக்கம் குறித்து தெளிவாகச் சுட்டிக்காட்டும் நூல்

அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

**விடை:இ) தொல்காப்பியம்**

98. வேறுபாடான ஒன்றைத் தேர்க.

அ) ஒளிப்பறவை ஆ) அலையும் ‘சுவடும்’ இ) சற்ப்பாலம் ஈ) சூரிய நிழல்

**விடை:ஆ) அலையும் ‘சுவடும்’**

99. யாமும் பாரியும் உளமே – அடிக்கோடிட்ட சொல் குறிக்கும் புலவர்

அ) ஔவையார் ஆ) பரணர் இ) நக்கீரர் ஈ) கபிலர்

**விடை: ஈ) கபிலர்**

100. தொடிபுடைய தோள் மணந்தனன் - எனத் தொடங்கும் பாடல் (செய்யுள்) இடம்பெற்ற நூல்

அ) புறநானூறு ஆ) கலித்தொகை இ) அகநானூறு ஈ) பதிற்றுப்பத்து

**விடை:அ) புறநானூறு**

101. ‘ஈறுபோதல்’ என்ற ஒரு விதியில் மட்டும் புணரும் பண்புத்தொகைச் சொல்

அ) செம்பரிதி ஆ) செந்நிறம் இ) செந்தமிழ் ஈ) வெங்கதிர்

**விடை: இ) செந்தமிழ்**

102. ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன இதனையே ….. என்கிறோம்

அ) இலக்கியத் தனம் ஆ) கலை முழுமை இ) ஒலிப்பின்னல் ஈ) தொகைநிலை

**விடை:இ) ஒலிப்பின்னல்**

103. ‘ஆனந்த்’ வேளாண்மை பல்கலைக்கழகம் அமைந்துள்ள மாநிலம்

அ) மகாராஷ்டிரம் ஆ) கர்நாடகம் இ) குஜராத் ஈ) ஆந்திரபிரதேசம்

**விடை:இ) குஜராத்**

104. அய்யப்ப மாதவன் வெளியிட்ட கவிதை குறும்படம்

அ) மழைக்குப் பிறகும் மழை ஆ) இன்று இ) நான்பது வேறொருவன் ஈ) நீர்வெளி

**விடை:ஆ) இன்று**

105. ‘கண்ணி’ என்பது

பொருள் - 1) தலையில் சூடும் மாலை

பொருள் - 2) இரண்டு அடிகளால் ஆன பாடல் வகை

அ) இரண்டும் சரி ஆ) இரண்டும் தவறு இ) பொருள் - 1 சரி ஈ) பொருள் - 2 சரி

**விடை: அ) இரண்டும் சரி**

106. கூற்று – 1) உலக மொழிகள் அனைத்திலும் வினைச்சொற்களே மிகுதி என்பர்

கூற்று – 2) திணை, பால், எண், இடம் ஆகியவை மொழியின் அடிப்படை பண்புகள்

அ) கூற்றுகள் இரண்டும் சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு

இ) கூற்றுகள் இரண்டும் தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி

**விடை: ஈ) கூற்று 1 தவறு 2 சரி**

107. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள் சங்ககாலச் சமுகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன அவை .........

அ) அறவோர் துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் சுவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

**விடை: ஆ) திருமணமும் குடும்பமும்**

108. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது ..........

அ) தனிக்குடும்பமுறை ஆ) விரிந்த குடும்முறை

இ) தாய்வழிச் சமுகமுறை ஈ) தந்தைவழிச் சமுக முறை

**விடை: ஈ) தந்தைவழிச் சமுக முறை**

109. பொருத்தமான விடையை தேர்ந்தெடுக்க

| | | |
|---|---|---|
| அ) உரிமைத்தாகம் | - | 1) பாரசீகக் கவிஞர் |
| ஆ) அஞ்ஞாடி | - | 2) பூமணி |
| இ) ஜலாலுத்தீன்ரூமி | - | 3) பக்தவச்சல பாரதி |
| ஈ) தமிழர் குடும்ப முறை | - | 4) சாகித்திய அகாதெமி |

அ) 1. 2. 4. 3 ஆ) 1. 4. 2. 3 இ**) 2. 4. 1. 3** ஈ) 1. 4. 3. 2

**விடை: இ) 2. 4. 1. 3**

110. 'இவற்றை வாயிலுக்கே சென்று' இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது எதனை ?

அ) வக்கிரத்தை ஆ) அவமானத்தை இ) வஞ்சனையை ஈ) வரும் அனைத்தையும்

**விடை: ஈ) வரும் அனைத்தையும்**

111. ‘உவா உற வந்து கூடும் உடுபதி இரவி ஒத்தார்’ – யார் யார் ?

அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன் சவரி

**விடை: இ) இராமன், சுக்ரீவன**

112. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு ?

அ) செய்யாமல் செய்த உதவிக்கு ஆ) பயன்தூக்கார் செய்த உதவிக்கு

இ) தினைத்துணை நன்றிக்கு ஈ) செய்ந்நன்றிக்கு

**விடை : செய்யாமல் செய்த உதவிக்கு**

113. பொருத்துக:

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1) சேர்ந்தாரைக் கொல்லி

ஆ) பயன் தூக்கார் செய்த உதவி - 2) ஞாலத்தின் மாணப்பெரிது

இ) சினம் - 3) தெய்வத்துள் வைக்கப்படும்

ஈ) காலத்தினாற் செய்த நன்றி - 4) நன்மை கடலின் பெரிது

அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2 இ) 1 2 3 4 ஈ) 2 3 4 1

**விடை : 3 4 1 2**

114. **வெ**ண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம் ? பொருத்தமான சீரினைக் கொண்டு

கோடிட்ட இடங்களை நிரப்புங்கள் .

அ) அன்பே ………. (ஆர்வமாய் : தகளியாய்)

**விடை : தகளியாய் - மாமுன் நிரை**

ஆ) வான்மழை ………. ( தூறலில் : பொழிந்திடின்)

**விடை : தூறலில் -**

இ) கண்ணிரண்டும்…….. ( இலாதார் : இல்லார்)

**விடை : இல்லார் - காய்முன் நேர்**

ஈ) வெண்ணிலவு….. (காய்கிறது : ஒளிர்கிறது)

**விடை : காய்கிறது – காய்முன் நேர்**

உ) வெய்யோன் ……. ( காய்ந்திட : ஒளிர்ந்திட )

**விடை : ஒளிர்ந்திட – மாமுன் நிரை**

115. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.

**அ) கல்வி கரையில் ………..** விடை : கற்பவர்

**ஆ) கல்லாரே ஆயினும் ……….** விடை : கற்றாரை

**இ) நல்லவை செய்யின் ………..** விடை : நலமேயாம்

**ஈ) அவமதிப்பும் ஆன்ற ………..** விடை : குணனும்

**உ) உண்ணாது நோற்பார் .........** **விடை : பெரியார்**

116. பொருத்துக :

அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்

ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்

இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்

ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா

**விடை : அ – 4, ஆ – 3, இ - 1, ஈ - 2**

117. குடும்பம் எனும் சொல், முதன் முதலில் ......... நூலில் தான் வருகிறது.

அ) புறநானூறு ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) அகநானூறு

118. சங்கப் பாடல்களில் 'மனை', 'இல்' எனும் சொற்கள் குறிப்பது .......

அ) வாழிடம் ஆ) காவற்காடு இ) கோட்டை ஈ) சமவெளி

**விடை : வாழிடம்**

119. கூற்று 1 : சங்க காலத்தில், கண சமுகத்திற்குத் தாயே தலைமை வகித்தார்.

கூற்று 2 : திருமணம், குடும்பம் எனும் சொற்கள், தொல்காப்பியத்தில் எங்கும் இடம் பெறவில்லை.

அ) 1 மட்டும் சரி 2) 2 மட்டும் சரி இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் சரியில்லை

**விடை : இரண்டும் சரி**

120. 'குடும்பு' எனும் சொல் உணர்த்தும் பொருள்.

அ) கூடி வாழுதல் ஆ) தனிகுடும்பம் இ) குடும்பமுறை ஈ) பிரிந்து வாழுதல்

**விடை : அ) கூடிவாழுதல்**

121. 'மனையுரை மகளிர்க்கு ஆடவர் உயிரே' எனும் பாடல்வரி இடம் பெற்றுள்ள நூல் ......

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) பரிபாடல்

**விடை : குறுந்தொகை**

122. இல்வாழ்வின் பயனாக கருதப்படுவது ........

அ) தாய்வழி குடும்பம் ஆ) தந்தைவழி குடும்பம்

இ) மனையறம் காத்தல் ஈ) கூட்டுக் குடும்பம்

**விடை : மனையறம் காத்தல்**

123. 'சிலம்புகழி நோன்பு' செய்வதற்கு உரியவர் ...........

அ) நற்றாயின் தாய் ஆ) செவிலித்தாய் இ) தலைவனின்தாய் ஈ) தலைவியின் தாய்

**விடை : தலைவனின் தாய்**

124. ' இலக்கிய மானிடவியல்' என்னும் நூலை இயற்றியவர் ........

அ) சுப்பிரமணிய பாரதி ஆ) பக்தவச்சல பாரதி இ) பாரதி பாஸ்கர் ஈ) சோமசுந்தர பாரதி

**விடை : ஆ) பக்தவச்சல பாரதி**

125. ‘மஸ்னவி’ என்பது ……..

அ) ஆப்கானிய இலக்கியம் ஆ) சத்தியமூர்த்தியின் மொழிப்பெயர்ப்பு

இ) ஜலாலுத்தீன் ரூமியின் சூ.ஃ.பி தத்துவப்படைப்பு

ஈ) பண்பாட்டை விளக்கும் இலக்கியம்

**விடை : இ) ஜலாலுத்தின் ரூமியின் சூ.ஃ.பி தத்துவப்படைப்பு**

126. வாயிலுக்கே சென்று, இன்முகத்துடன் வரவேற்க வேண்டியவை

அ) வக்கிரம், அவமானம், மனசோர்வு ஆ) வக்கிரம், வஞ்சனை, அற்பத்தனம்

இ) வக்கிரம், ஆனந்தம், விழிப்புணர்வு ஈ) வக்கிரம், அவமானம், வஞ்சனை

**விடை : ஈ) வக்கிரம், அவமானம், வஞ்சனை**

127. தமிழ்ப் பண்பின் தொடர்ச்சி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ………

அ) யாவரும்கேளிர் ஆ) சிறியோரை இகழ்தல் இலமே

இ) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ஈ) காக்கை குருவி எங்கள் சாதி

**விடை : ஈ) காக்கை குருவி எங்கள் சாதி**

128. ‘இளவல் உன் இளையான்’ என்பதில் இளையான் எனக் குறிப்பிடப்பட்டவன் ……….

அ) குகன் ஆ) பரதன் இ) சுக்ரீவன் ஈ) இலக்குவன்

**விடை : ஈ) இலக்குவன்**

129. நன்னுதலவன் என்னும் தொடர் ……… எனப் பிரியும்

அ) நன் + னுதலவள் ஆ) நல் + நுதலவள்

இ) நல்ல + நுதலவள் ஈ) நன்மை + நுதல் + அவள்

**விடை : ஈ) நன்மை + நுதல் + அவள்**

130. ‘துன்பு உளது எனின் அன்றோ, சுகம் உளது ? யார் யாரிடம் கூறியது ?

அ) குகன் இராமனிடம் கூறியது ஆ) பரதன் குகனிடம் கூறியது

இ) இராமன் இலக்குவனிடம் கூறியது ஈ) இராமன் குகனிடம் கூறியது

**விடை : ஈ) இராமன் குகனிடம் கூறியது**

131. இடைமன்னும் எனக் குறிப்பிடப்பட்டது.

அ) துன்பம் ஆ) சுகம் இ) முடிவு ஈ) பிரிவு

**விடை : ஈ) பிரிவு**

132. இராமனை சுக்ரீவனுடன் நட்பு கொள்ள செய்தவர் ………

அ) அனுமன் ஆ) சடாயு இ) சவரி ஈ) வீடணன்

**விடை : இ) சவரி**

133. ‘இன்னுரை’ என்பது …….. எனப் பிரியும்.

அ) இன் + உரை ஆ) இன் + துரை இ) இனிய + உரை ஈ) இனிமை + உரை

**விடை : ஈ) இனிமை + உரை**

134. ‘மாண்டது என் மாயப் பாசம்’ என்று யாரிடம் யார் கூறியது ?

அ) இராமனிடம் குகன் ஆ) இலக்குவனிடம் சவரி

இ) இராமனிடம் சவரி ஈ) இராமனிடம் சடாயு

**விடை : இ) இராமனிடம் சவரி**

135. நீ என் உயிர் அனையாய் என இராமன் கூறியது ......................

அ) அனுமனிடம் ஆ) சுக்ரீவனிடம் இ) வீடணனிடம் ஈ) குகனிடம்

**விடை : ஈ) குகனிடம்**

136. **நீ** என் உயிர் துணைவன் என இராமன் கூறியது ..........

அ) வீடணனிடம் ஆ) சுக்ரீவனிடம் இ) குகனிடம் ஈ) சடாயுவிடம்

**விடை : ஆ) சுக்ரீவனிடம்**

137. பொருள் குழப்பமின்றி அழுதுவதற்கு காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்

ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

**விடை : இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்**

138. **பொ**ருத்துக.

| | | |
|---|---|---|
| அ) இடைச்சொல் | - | 1) ய் வ் |
| ஆ) துணைவினை | - | 2) கள் |
| இ) உடம்படுமெய் | - | 3) கொள் |
| ஈ) பன்மை உணர்த்தும் விகுதி | - | 4) படி |

அ) 3 2 1 4 ஆ) 3 1 2 4 இ) 3 4 1 2 ஈ) 3 4 2 1

**விடை : இ) 3 4 1 2**

139. **ஞா**லத்தின் மாணப்பெரிது

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன்தூக்கார் செய்த உதவி

இ) காலத்தினால் செய்த நன்றி ஈ) விலைப் பொருட்டால் ஊன்தருதல்

**விடை : இ) காலத்தினால் செய்த நன்றி**

140. நடுவன்மை நாணுபவர் ......... செய்யார்.

அ) புன்மைஇல் காட்சியவர் ஆ) தினைத்துணை நன்றி இ) பழிப்படுவ ஈ) நன்றல்

**விடை : இ) பழிப்படுவ**

141. சினம் கொல்லுவன .........

அ) மறத்தலும் வெகுளியும் ஆ) தன்னையே

இ) நகையும் உவகையும் ஈ) பகையும் நட்பும்

**விடை : இ) நகையும் உவகையும்**

142. **நுண்**ணிய நூல்பல கற்பினும் மிகுவது.

அ) சினம் ஆ) உலகத்து இயற்கை இ) தெள்ளிய அறிவு ஈ) உண்மை அறிவு

**விடை : ஈ) உண்மை அறிவு**

143. திருக்குறளில் அமைந்த இயல்களின் மொத்த எண்ணிக்கை ……………..

அ) நான்கு ஆ) இரண்டு இ) எட்டு ஈ) ஒன்பது

**விடை : ஈ) ஒன்பது**

144. **அ**றம், பொருள், இன்பம் என அமைந்த குறளின் அதிகார எண்ணிக்கை ………..

அ) 38, 25, 70 ஆ) 70, 38, 25 இ) 38, 70, 25 ஈ) 25, 70, 38

**விடை : இ) 38, 70, 25**

145. மௌனகுருவிடம் பாடம் படித்தவர் …………

அ) உ.வே.சா ஆ) வ.சுப. மாணிக்கனார்

இ) ப. சுப்பிரமணியனார் ஈ) மா.இராசமாணிக்கனார்

**விடை : ஈ) மா. இராசமாணிக்கனார்**

146. அஷராப்பியாசம் என்பது ……. எனப்படும்.

அ) எழுத்துப்பயிற்சி ஆ) சொல்பயிற்சி இ) கவிதைப்பயிற்சி ஈ) இலக்கணப்பயிற்சி

**விடை : அ) எழுத்துப்பயிற்சி**

147. முதன்முதலில் எந்த வயதில் வித்யாப்பியாசம் செய்யப்படுகிறது.

அ) இரண்டாம் ஆ) மூன்றாம் இ) நான்காம் ஈ) ஐந்தாம்

**விடை : ஈ) ஐந்தாம்**

148. "ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்" என்பது …….

அ) நன்னூல் ஆ) பழைய வெண்பா இ) தமிழ்விடுதூது ஈ) சிந்தாமணி

**விடை : ஈ) சிந்தாமணி**

149. " மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்

மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்" — எனத் தமிழ்மொழியைச் சிறப்பித்துக் கூறும் நூல்

அ) தமிழ்விடு தூது ஆ) குடும்ப விளக்கு இ) நன்னூல் ஈ) தொல்காப்பியம்

**விடை : அ) தமிழ்விடு தூது**

150. பள்ளிக்கு முதலில் வருபவரை ……………. என்று சொல்வார்கள்

அ) முதலான் ஆ) வேத்தான் இ) சட்டாம்பிள்ளை ஈ) சிசியான்

**விடை : ஆ) வேத்தான்**

151. நுந்தை – சொல்லின் இலக்கணக் குறிப்பு :

அ) பெயரெச்சம் ஆ) போலி இ) வினைதொகை ஈ) நும் தந்தை என்பதன் மருஉமொழி

**விடை : ஈ) நும் தந்தை என்பதன் மருஉமொழி**

152. எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே என்னும் ஔவையாரின் புறப்பாட்டு நினைவூட்டுவது ……….

அ) பழம் பண்பாட்டு மரபை ஆ) பழம் குடும்ப உறவை

இ) பழந்தமிழ் பெண்களின் நிலையை ஈ) பழந்தமிழ் ஆண்களின் நிலையை

**விடை : அ) பழம் பண்பாட்டு மரபை**

153. பூமணி – யின் இயற்பெயர் ………..

அ பூ. மணியின் ஆ) பூ மாறன் இ) பூ. மணிவாசகன் ஈ) பூ. மாணிக்கவாசகர்

154. 2014 ஆம் ஆண்டு சாகித்ய அகாதெமியின் விருது பெற்ற பூமணியின் புதினம் ……..

அ) அஞ்ஞாடி ஆ) கருவேலம்பூக்கள் இ) வெக்கை ஈ) பிறகு

**விடை : அ) அஞ்ஞாடி**

155. **சொ**ற்களை சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் ……….. வேறுபாடு ஏற்படுகின்றன.

அ) சொல் ஆ) எழுத்து இ) பொருள் ஈ) மரபு

**விடை : இ) பொருள்**

156. கூற்று 1 : நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இடாமல் எழுதினாலே பொருள் மயக்கம் ஏற்படாது.

கூற்று 2 : இடைசொற்கள், சொல்லுருபுகள், விகுதிகள் ஆகியவற்றை சொற்களில் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் பொருள் வேறுபாடு ஏற்பாடது.

அ) கூற்று 1, 2 இரண்டும் சரி ஆ) இரண்டும் தவறு

இ) கூற்று 1 சரி 2 தவறு ஈ) கூற்று 2 சரி 1 தவறு

**விடை : அ) கூற்று 1, 2 இரண்டும் சரி**

157. ‘அது’ – என்னும் வேற்றுமை உருபு ……. உரியது

அ) பலவின் பாலுக்கு ஆ) அ.ஃறிணைக்கு இ) உயர்திணைக்கு ஈ) தன்மைக்கு

**விடை : ஆ) அ.ஃறிணைக்கு**

158. திருக்குறள் என்பது

அ) ஆகுபெயர் ஆ) அடைமொழி இ) அடையடுத்த கருவியாகுபெயர்

ஈ) செல்வம் நிறைந்தநூல் **விடை : இ) அடையடுத்த கருவியாகுபெயர்**

159. ‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்ற பழமொழியில் நால், இரண்டு எனக் குறிப்பிடுவது ........

அ) ஏலாதி, பழமொழி ஆ) நாலடியார், திருக்குறள்

இ) நன்னூல், திரிகடுகம் ஈ) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு

**விடை : ஆ) நாலடியார், திருக்குறள்**

160. திருக்குறள் ஏட்டுச்சுவடிகளில் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு ............

அ) 1912 ஆ) 1812 இ) 1712 ஈ) 1821

**விடை : ஆ) 1812**

161. திருக்குறளை முதன் முதலில் பதிப்பித்து, தஞ்சையில் வெளியிட்டவர் .................

அ) ஞானபிரகாசர் ஆ) மாயூரம் வேதநாயகம் பிள்ளை

இ) பரிதிமாற் கலைஞர் ஈ) மீனாட்சி சுந்தரனர்

**விடை : அ) ஞானபிரகாசர்**

162. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என கூறியவர் .............

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) சுரதா

**விடை : ஆ) பாரதிதாசன்**

163. 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ்
வையகமே ' – என்று திருவள்ளுவரைப் போற்றிப் புகழ்ந்தவர்

அ) பாரதி ஆ) பாரதிதாசன் இ) கவிமணி ஈ) நாமக்கல்லார்

**விடை : ஆ) பாரதிதாசன்**

164. குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல் ?

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

**விடை : ஆ) கணிதம்**

165. புலமைப் பெருங்கடல் என்று அழைக்கப்படுபவர் ...........

அ) வாணிதாசன் ஆ) கம்பர் இ) சுரதா ஈ) உ.வே.சா

**விடை : ஈ) உ.வே.சா**

166. 'மகாமகோபாத்தியாய' 'திராவிட வித்தியா பூஷணம்' 'தாகஷிணாத்திய கலாநிதி' உள்ளிட்ட பட்டங்களுக்குச் சொந்தக்காரர்

அ) சுத்தானந்த பாரதியார் ஆ) மீனாட்சி சுந்தரனார்

இ) நாவலர் சோமசுந்தரனார் ஈ) உ. வே. சாமிநாதர்

**விடை : ஈ) உ. வே. சாமிநாதர்**

167. மில்டனின் சுவர்க்க நீக்கம் என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ...........

அ) மா. இராசமாணிக்கனார்     ஆ) ப. சுப்பிரமணியனார்

இ) சோம சுந்தர பாரதியார்     ஈ) நாராயணசுமாமி

**விடை : ஆ) ப. சுப்பிரமணியனார்**

168. பொருத்துக .

அ) நாராயணசுவாமி - 1. கணபதியார் திண்ணைப்பள்ளி

ஆ) மா. இராசமாணிக்கனார் - 2. முத்துராம பாரதி திண்ணைப்பள்ளி

இ) சோம சுந்தர பாரதியார் - 3. மௌனகுரு

ஈ) வேங்கட சாமி 4. எட்டயபுரம் திண்ணைப்பள்ளி

உ) வெள்ளக்கால் ப.சுப்பிரமணியனார் - 5. வல்லம் குருசாமி வாத்தியார் திண்ணைப்பள்ளி

அ) 2 3 4 5 1   ஆ) 1 2 3 4 5   இ) 5 3 2 4 1  ஈ) 2 4 5 1 3

**விடை : அ) 2 3 4 5 1**

169. சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்கு பெயர்

அ) தூக்கு/ அசை   ஆ) பாடம்/ ஏடு

இ) எழுத்தாணி/ அசை  ஈ) வாதம்/ தூக்கு

**விடை : அ) தூக்கு/ அசை**

170. ஓதற் பிரிவிற்குரிய கால எல்லை

அ) ஓர் ஆண்டு     ஆ) இரண்டு ஆண்டுகள்

இ) மூன்று ஆண்டுகள்     ஈ) ஐந்தாண்டுகள்

**விடை : இ) மூன்று ஆண்டுகள்**

171. ஓதற் பிரிவு பற்றிக் கூறும் இலக்கண நூல் …….

அ) தண்டி ஆ) நன்னூல்  இ) தொல்காப்பியம்  ஈ) வீரச்சோழியம்

**விடை : இ) தொல்காப்பியம்**

172. தமிழைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்த ஆண்டு

அ) 2004  ஆ) 2005   இ) 2006 ஈ) 2007

**விடை : 2004**

173. சுரதா நடத்திய கவிதை இதழ்

அ) இலக்கியம் ஆ) காவியம் இ) தேன்மழை  ஈ) குயில்

**விடை : ஆ) காவியம்**

174. இதில் வெற்றி பெற – என்ற கவிதை இடம் பெற்றுள்ள சுரதாவின் கவிதை தொகுப்பு

அ) தேன்மழை  ஆ) துறைமுகம்  இ) அமுதும்தேனும்   ஈ) குயில்

**விடை : ஆ) துறைமுகம்**

175. உவமைக் கவிஞர் என்று சிறப்பிக்கப்படுவர் …………….

அ) இராசகோபாலன் ஆ) கனகசுப்புரத்தினம்

இ) கவிமணி ஈ) நாமக்கல் வெ. இராமலிங்கனார்

**விடை:அ) இராசகோபாலன்**

176. பாவேந்தர் நினைவுப் பரிசினைப் பெற்ற முதற் பாவலர் ……….

அ) பாரதி ஆ) சோமசுந்தர பாரதி இ) சுரதா ஈ) வாணிதாசன்

**விடை : இ) சுரதா**

177. நல்ல புலவர்களின் பாடல்களில் தங்குவது

அ) கீர்த்தி ஆ) தளை இ) அடி ஈ) வசனம்

**விடை : அ) கீர்த்தி**

178. சிறந்த கேள்வி எழுப்புவதால் …….. விளையும்

அ) பயிர்கள் ஆ) குளிர் இ) அறம், பொருள் ஈ) ஆராய்ச்சி

**விடை : ஈ) ஆராய்ச்சி**

179. 'இடையீடு' – என்ற கவிதை இடம் பெற்றுள்ள சி. மணியின் கவிதை தொகுப்பு …….

அ) நடை ஆ) இதுவரை இ) வரும்போகும் ஈ) யாப்பும், கவிதையும்

**விடை : ஆ) இதுவரை**

180. (I) 'நடை' என்னும் சிறுகதை நடத்தியவர் சி. மணி

(II) 'யாப்பும் கவிதையும்' என்ற நூலும், 'வரும் போகும்', 'ஒளிச்சேர்க்கை' ஆகிய கவிதை தொகுப்புகளை வெளியிட்டவர் சி. மணி

அ) (i) (ii) இரண்டும் தவறு ஆ) (i) (ii) இரண்டும் சரி

இ) (i) சரி (ii) தவறு ஈ) (i) தவறு (ii) சரி

**விடை : ஆ) (i) (ii) இரண்டும் சரி**

181. 'தாவோ தே ஜிங்' என்ற சீன மெய்யியல் நூலைத் தமிழில் மொழிப்பெயர்த்தவர் ……..

அ) பூ. மணி ஆ) தாராபாரதி இ) சுரதா ஈ) சி. மணி

**விடை : ஈ) சி. மணி**

182. சொல்ல விரும்பியதெல்லாம் …………..

அ) சொல்லில் ஆ) பேச்சில் இ) உணர்வில் ஈ) வாழ்வில்

**விடை : அ) சொல்லில்**

183. எலிக்குப் பொறிவைத்தால் ………. விழுவதுண்டு

அ) புலியும் ஆ) பூனையும் இ) விரலும் ஈ) புறாவும்

**விடை : இ) விரலும்**

184. வானுக்கு விளக்கடித்தது ………..

அ) நிலவு ஆ) செங்கதிர் இ) வால்மீன் ஈ) மின்னல்

**விடை : இ) வால்மீன்**

185. ‘சுவைப்போன் பசியை,

சுவைமுடிச்சைச் சார்ந்தது’ - இதில் சுவைப்போன் என்று குறிப்பிடப்பட்டவன்.

அ) அரசன் ஆ) ஆசிரியர் இ) கவிதை எழுதுபவள் ஈ) வாசகன்

**விடை : ஈ) வாசகன்**

186. ‘காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை’ - இத்தொடரின் கலன் உணர்த்தும் பொருள்

அ) போர்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) பொறி

**விடை : இ) இசைக்கருவி**

187. ஔவையாரின் பாடலுக்கு பரிசில் தராமல் காலம் நீடித்தவர் ……..

அ) பாரி ஆ) பேகன் இ) ஓரி ஈ) அதியமான்

**விடை : ஈ) அதியமான்**

188. புறம், புறப்பாட்டு என அழைக்கப்படும் நூல் ………

அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) பரிபாடல் ஈ) கலித்தொகை

**விடை : அ) புறநானூறு**

189. புறநானூற்றில் ஔவையார் பாடிய பாடல்கள் ……….

அ) 32 ஆ) 33 இ) 15 ஈ) 16

**விடை : அ) 32**

190. உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளம் உள்ளவர்கள் ………..

அ) அரசர்கள் ஆ) வள்ளல்கள் இ) புலவர்கள் ஈ) நாடக கலைஞர்கள்

**விடை : இ) புலவர்கள்**

191. ஔவையாரின் சங்கப் பாடல்களின் மொத்தம் ………

அ) 33 ஆ) 59 இ) 15 ஈ) 7

**விடை : ஆ) 59**

192. **போ**கும் திசைக்கு காட்டினையும், உணவுக்குக் காட்டில் உள்ள மரங்களையும் உவமை காட்டி பாடியவர் ………..

அ) கபிலர் ஆ) பரணர் இ) நக்கீரர் ஈ) ஔவையார்





**விடை : ஈ) ஔவையார்**


193. சாலைப் போக்குவரத்து உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி எண்

அ) 100 ஆ) 101 இ) 103 ஈ) 108

**விடை : இ) 103**

194. குறுகிய பாலம் உள்ளது என்பதைக் குறிக்கும் குறியீடு

அ)  ஆ)  இ)  ஈ) 

**விடை :** 

195. சொல்லுதலை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது

அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

**விடை : ஆ) வெண்பா**

196. வெண்பாவை ……….. என்றும் அழைப்பர்

அ) விருத்தப்பா ஆ) இன்பா இ) வன்பா ஈ) மென்பா

**விடை : இ) வன்பா**

197. பொருத்துக.

அ) இரண்டடி வெண்பா - 1) பஃறொடை வெண்பா

ஆ) மூன்றடி வெண்பா - 2) நேரிசை வெண்பாவும், இன்னிசை வெண்பாவும்

இ) நான்கடி வெண்பா - 3) குறள் வெண்பா

ஈ) நான்கடிமுதல் பன்னிரண்டடி வரை -4) நேரிசை, இன்னிசைச் சிந்தியல் வெண்பா

அ) 3 4 1 2 ஆ) 1 2 3 4 இ) 4 3 2 1 ஈ) 3 4 2 1

**விடை : அ) 3 4 1 2**

198. பொருத்துக

அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்

ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்

இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்

ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா

அ) 1 2 4 3 ஆ) 4 3 1 2 இ) 2 3 1 4 ஈ) 3 4 2 1

**விடை : ஆ) 4 3 1 2**

199. வன்தொடர்க் குற்றியலுகரத்திற்கான சான்று ……

அ) அஃது ஆ) எனக்கு இ) தெரியாது ஈ) புரியாது

**விடை : ஆ) எனக்கு**

200. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம்

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

**விடை : ஈ) அ, ஆ, இ - அனைத்தும்**

201. படிமம் என்பதன் பொருள்

அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

**விடை : இ) காட்சி**

'காலை இளம் வெயில் நன்றாகமேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' - இக்கவிதையில் ……… பயின்று வந்துள்ளன.

அ) பயன்படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

**விடை : ஆ) வினைப்படிமம்**

202. கூற்று : உவமை உருவம்போலப் படிமமும் வினை, பயன்,மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு காரணம் சரி

இ) கூற்றும் சரி, காரணம் சரி ஈ) கூற்றும் தவறு காரணம் தவறு

**விடை : அ) கூற்று சரி, காரணம் தவறு**

203. மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க

அ) நெருஞ்சிக் கட்கின் புதுமலா் முட்பயந் தாங்கு….

ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது.

இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்….

ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப…….

**விடை : இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்….**

204. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) வெந்தாறு பொன்னின் அந்திபூக்க | - | 1. பயன்படிமம் |
| ஆ) கட்டில் நினைக்கும் இழிசினை கையது | - | 2. உவமைப்படிமம் |
| இ) நெருஞ்சிக் கட்கின் புதுமலா் முட்பயந்தாங்கு | - | 3. மெய்ப்படிமம் |
| ஈ) சிவப்புக் கோட்டுக் கழுத்துப் பாசிமணிக் கண்ணும் | - | 4. உருவப்படிமம் |
| | | 5. வினைப்படிமம் |

அ) 4 2 3 5 ஆ) 4 5 3 1 இ) 4 5 1 3 ஈ) 4 5 2 3

**விடை : இ) 4 5 1 3**

205. **மெ**ய்ப்படிமம் என்பது .......... படிமம் எனவும் குறிப்பிடப்படும்

அ) பயன் ஆ) வினை இ) நிறம் ஈ) வடிவ

**விடை : ஈ) வடிவ**

206. 'நிறப்படிமம்' என்பது ...... படிமம் எனவும் கூறப்படும்.

அ) வினை ஆ) மெய் இ) உரு ஈ) பயன்

**விடை : இ) உரு**

207. சென்னை, வெறும் நகரம் மட்டுமன்று, நம்பிக்கை மையம்; காரணம்.........

அ) நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள் வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு

இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

ஈ) அ, ஆ, இ அனைத்தும்

**விடை : ஈ) அ, ஆ, இ அனைத்தும்**

208. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்

காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்ததாகவே இருந்தது.

அ) கூற்று சரி காரணம் சரி ஆ) கூற்று, காரணம் தவறு

இ) கூற்று தவறு காரணம் சரி ஈ) கூற்று சரி காரணம் சரி

209. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) திருவல்லிக்கேணி ஆறு | - | மாவலிபுரச் செலவு |
| ஆ) பக்கிங்காம் கால்வாய் | - | கல்கோடாரி |
| இ) பல்லாவரம் | - | அருங்காட்சியம் |
| ஈ) எழும்பூர் | - | கூவம் |

அ) 1 2 3 4 ஆ) 4 2 1 3 இ) 4 1 2 3 ஈ) 2 4 3 1

**விடை : இ) 4 1 2 3**

210. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு

அ) நேர்மறைப்பண்பு ஆ) எதிர்மறைப்பண்பு

இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

**விடை : இ) முரண்பண்பு**

211. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

**விடை : இ) நாய்**

212. **எது** சரியானது ?

i) களிற்றியானை நிரை - 120 பாடல்கள்

ii) மணிமிடை பவளம் - 180 பாடல்கள்

iii) நித்திலக் கோவை - 100 பாடல்கள்

அ) (i) மட்டும் அ) (ii) மட்டும் இ) (iii) மட்டும் ஈ) அனைத்தும்

**விடை : ஈ) அனைத்தும்**

213. அகநானூற்றுப் பாடலின் அடிவரையறை .........

அ) 13 – 31 ஆ) 4 – 40 இ) 3 – 6 ஈ) 9 – 12

**விடை : அ) 13 - 31**

214. கடலுக்கு அருகில் மணல் திட்டுகளில் கடல் நீர் தேங்கியிருக்கும் பகுதி .........

அ) உப்பங்கழி ஆ) நெய்தல் நிலம் இ) சுனைநீர் ஈ) மீன் பிடித்தளம்

விடை : அ) உப்பங்கழி

215. 'ஒரு குட்டித் தீவின் வரைபடம்' என்ற சிறுகதைத் தொகுப்பை எழுதியவா்

அ) தோப்பில் முகமது மீரான் ஆ) இராமலிங்க அடிகள்

இ) பாலச்சந்திரன் ஈ) நகுலன்

**விடை : அ) தோப்பில் முகமது மீரான்**

216. அசையும் உருவங்களைப் படம்பிடிக்கும் கருவியைக் கண்டுபிடித்தவா்

அ) தாமஸ் ஆல்வா எடிசன் ஆ) எட்வா்டு மை பிரிட்சு

இ) லூமியா் சகோதா்கள் ஈ) ஜாா்ஜ் மிலி

**விடை : அ) தாமஸ் ஆல்வா எடிசன்**

217. படப்பிடிப்புக் கருவியோடு திரையிடும் கருவியையும் சோ்த்துத் திரைப்படம் என்னும் விந்தையை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்தவா்.

அ) ஜாா்ஜ் மிலி ஆ) எடிசன் இ) லூமியா் சகோதரா்கள் ஈ) வின்செண்ட்

**விடை : இ) லூமியா் சகோதரா்கள்**

218. திரைப்படத்தை ....... கலை என வகைப்படுத்துகிறோம்.

அ) இரு பரிமாணக் ஆ) முப்பரிமாணக் இ) ஆறுபரிமாணக் ஈ) எட்டுபரிமாணக்

**விடை : ஆ) முப்பரிமாணக்**

219. திரைப்படத்தில் உரையாடலை விட அதிகம் பேசுவது

அ) தொகுப்பாளா் ஆ) பின்னனி இசை இ) மௌனம் ஈ) கூத்து

**விடை : இ) மௌனம்**

220. 1940 – ல் சாா்லி சாப்ளின் எடுத்த முதல் திரைப்படம்......

அ) தி கிரேட் பிக்டேட்டா் ஆ) மாடா்ன் டைம்ஸ் இ) சிட்டி லைப்ஸ் ஈ) லிட்டில் டிராம்ப்

**விடை : அ) தி கிரேட் பிக்டேட்டா்**

221. வறுமைமிக்க தன் இளமை வாழ்வை தி. கிட் என்ற வெற்றிப் படமாக்கியவர் ……

அ) சாமிக்கண்ணு ஆ) எடிசன் இ) மிலி ஈ) சாப்ளின்

**விடை : ஈ) சாப்ளின்**

222. ‘பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்’- விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்.

அ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்

ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்

ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

**விடை: ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்**

223. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது.

அ) கடந்த காலத் துயரங்கள்

ஆ) ஆட்களற்ற பொழுதை

இ) பச்சையம் இழந்த நிலத்தை

ஈ) அனைத்தையும்

**விடை : அ) கடந்த காலத் துயரங்கள்**

224. முச்சந்தி இலக்கியம் என்பது

கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது

கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது.

அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

ஆ) கூற்று 1,2 சரி

இ) கூற்று 1,2 தவறு

ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**விடை : இ) கூற்று 1,2 தவறு**

225. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்-- இத்தொடரில் பெயரெச்சம்

அ) உண்டு

ஆ) பிறந்து

இ) வளர்ந்த

ஈ) இடந்தனில்

**விடை: இ) வளர்ந்த**

226. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

அ) தனக்குப் பயன்படும் பிறருக்குப் பயன்படாது

ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது

இ) பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது

ஈ) தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

**விடை: ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது**

**227.** சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி

அ) உதகமண்டலம்

ஆ) விழுப்புரம்

இ) திண்டிவனம்

ஈ) தருமபுரி

**விடை: இ) திண்டிவனம்**

228. பொருந்தாக ஒன்றைக் கண்டறிக

அ) தனித்தமிழ்த் தந்தை – 1. மு.வரதராசனார்

ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - 2. மயிலை சீனி.வேங்கடசாமி

இ) தமிழ்த்தென்றல் - 3. திரு.வி.க.

ஈ) மொழிஞாயிறு – 4. தேவநேயப்பாவாணர்

**விடை: அ) தனித்தமிழ்த் தந்தை – 1. மு.வரதராசனார்**

229. ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப் பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்

அ)பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்

இ)சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

**விடை: ஈ) கிறித்தவமும் தமிழும்**

230. நான் வெற்றுவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது

அ) தமது வீட்டு முகவரியை

ஆ) தமது குடும்பத்தை

இ) தமது அடையாளத்தை

ஈ) தமது படைப்புகளை

**விடை: இ) தமது அடையாளத்தை**

231. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும்

ஆ) நல்லியக் கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும்

ஈ) பாரியும் காரியும்

**விடை: ஆ) நல்லியக் கோடனும் குமணனும்**

232. மனித இனம் தோன்றியபோதே துளிர்க்கத் தொடங்கியது.

அ)வரலாறு

ஆ)பண்பாடு

இ) மேலாண்மை

ஈ) நாகரிகம்

**விடை: இ) மேலாண்மை**

233. அரசன், எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதற்கு வள்ளுவர் கூறும் அதிகாரம்

அ) தெரிந்து தெளிதல்

ஆ) செங்கோன்மை

இ) வினைசெயல் வகை

ஈ) மடியின்மை

**விடை: ஈ) மடியின்மை**

234. கோவூர்கிழார், சோழன் நலங்கிள்ளியைப் புகழ்ந்து பாடிய பாடல் இடம்பெற்ற நூல்

அ)அகநானூறு

ஆ) புறநானூறு

இ) பதிற்றுப்பத்து

ஈ) பட்டினப்பாலை

**விடை: ஆ) புறநானூறு**

235. ஆணையிடும் அரசனும் அடக்கத்துடன் பணியாளரும் பற்றிய சுவரோவியம் கோவில்

அ) திருநெல்வேலி- நாறும்பூநாதர் கோவில்

ஆ)திருவொற்றீயூர்- படம்பக்கநாதர் கோவில்

இ) தஞ்சை – பெருவுடையார்க் கோவில்

ஈ) சிதம்பரம் - நடராசர் கோவில்

**விடை: அ) திருநெல்வேலி- நாறும்பூநாதர் கோவில்**

236. ஷேக்ஸ்பியரின் ‘டைமன்’ பற்றிய நாடகம் சிறந்த வாழ்வியல் விளக்கமாகும்

அ) நேர மேலாண்மை ஆ) நிருவாக மேலாண்மை

இ) வணிக மேலாண்மை ஈ) நிதி மேலாண்மை

**விடை: ஈ) நிதி மேலாண்மை**

237. கானல் வரி, ஈழம், கைவிட்ட ே பார்த்தீனியம் - முதலிய நாவல்களைப் படைத்தவர்

அ)தமிழ் நதி ஆ)முகம்மது இராவுத்தர்

இ) பிசிராந்தையார் ஈ) வெ.இறையன்பு

**விடை: ஈ) வெ.இறையன்பு**

238. ‘இலக்கியத்தில்’ மேலாண்மை என்னும் நூலை எழுதியவர்

அ)தமிழ்நதி ஆ) முகம்மது இராவுத்தர் இ) வெ.இறையன்பு ஈ)மகாதேவன்

**விடை: இ) வெ.இறையன்பு**

**239. இ**ந்திய ஆட்சிப்பணி தேர்வுக்குத் தமிழை விருப்பப் பாடமாகப் படித்து வெற்றி பெற்றவர்

அ)வெ. இறையன்பு ஆ)தமிழ்நதி இ)மகாதேவன் ஈ) கே.வி. சைலஜா

**விடை : அ)வெ. இறையன்பு**

240. பாண்டியப் போர்ப்படையின் உரோமாபுரிச் சிப்பாய்கள் இடம் பெற்றிருந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ள நூல்-

அ)மணிமேகலை ஆ) சிலப்பதிகாரம் இ) கம்பராமாயணம் ஈ) பதிற்றுப்பத்து

**விடை: ஈ) பதிற்றுப்பத்து**

241. புறநானூற்றில் 56- ஆம் பாடலில் ---- பற்றிய குறிப்பு இடம் பெறுகிறது.

அ) கிரேக்கர் வணிகம் ஆ) யவனரது கப்பல்கள் இ) எகிப்தியர்களின் நாகரிகம்
ஈ) சோழன் நலங்கிள்ளி

**விடை: ஆ) யவனரது கப்பல்கள்**

242. நிதி மேலாண்மை குறித்த டைமன் பற்றிய நாடகம் எழுதியவர்

அ) வெ.இறையன்பு ஆ) ஷேக்ஸ்பியர் இ)ஷெல்லிதாசன் ஈ) தமிழ்நதி

**விடை: ஆ) ஷேக்ஸ்பியர்**

243. "126 ஒற்றை வரிகளில் எழுதிய துளிகள்"- என்னும் நூலின் மூலம் உலகப்புகழ் பெற்ற கிரேக்க நாட்டு ஆசிரியர்

அ)ஷேக்ஸ்பியர் ஆ)ஸ்ட்ரேபோ இ) யாங்சௌ ஈ) ஹிராக்ளிடஸ்

**விடை: ஈ) ஹிராக்ளிடஸ்**

244. 'அதிசய மலர்' கவிதையின் ஆசிரியர்

அ)இறையன்பு ஆ)முகம்மது இராவுத்தர் இ)தமிழ்நதி ஈ) நகுலன்

**விடை: இ)தமிழ்நதி**

245. கவிஞர் தமிழ்நதியின் இயற்பெயர்

அ) நகுலன் ஆ) கோதைநாயகி அம்மாள் இ) நந்தகுமாரன் ஈ) கலைவாணி

ஈ) கலைவாணி

**விடை : ஈ) கலைவாணி**

246. பொருத்துக.

1)நந்தகுமாரனுக்கு மாதங்கி எழுதியது – குறுநாவல்

2)பார்த்தீனியம் -- சிறுகவிதை

3)கானல்வரி – கவிதை

4)அதன் பிறகும் எஞ்சும்- நாவல்

அ)1,4,3,2 ஆ)4,1,3,2 இ)2,4,1,3 ஈ)2,1,4,3

**விடை: இ)2,4,1,3**

247. பச்சையம் இழந்த நிலத்தில் நிறம்-

அ)பழுப்பு ஆ)கருப்பு இ) வெள்ளை ஈ)சாம்பல்

**விடை: ஈ)சாம்பல்**

248. ஞாபகத்தில் மட்டுமே மீந்திருப்பது—

அ)பூக்கள் ஆ) மனிதர்கள் இ) மரங்கள் ஈ) பசுமை

**விடை: இ) மரங்கள்**

249. ‘பாரத மக்களின் பரிதாபச் சிந்து என்று அழைக்கப்படும் நூல்

அ) தேயிலைத் தோட்டப்பாட்டு ஆ) கதைப்பாடல்கள் இ)தெருக்கூத்து ஈ)நாட்டுப்புறப்பாட்டு

**விடை: அ) தேயிலைத் தோட்டப்பாட்டு**

250. ‘பொய்யுரைக் கண்டு மயங்காதீர்’ - இதில் மயங்காதீர் என்பதன் இலக்கணக்குறிப்பு

சிறு மண்ணுளிப் பாம்புபோற் பெண்டு பிள்ளையுடன் --இதில் பயின்று வரும் உவமை-

அ)மண்ணுளிப்பாம்பு ஆ) பெண்டு இ)பிள்ளை ஈ)சிறு

**விடை: அ)மண்ணுளிப்பாம்பு**

251. நாட்டு நலனையும் நிருவாகச் சீர்மையையும் பாடும் துறைப்பாடல்கள்

அ) பாடாண் ஆ) பொருண்மொழிக்காஞ்சி இ) அமைச்சியல் ஈ)செவியறிவுறூஉ

**விடை: ஈ)செவியறிவுறூஉ**

252. தொன்மம் சமுதாயத்தின் ஆழ்மனதிலிருந்து வெளிப்படும் கூட்டமைப்பின் குறியீடுகள் என்று விளக்கும் அகராதி

அ)சதுரகராதி ஆ) தொன்னூல் விளக்கம் இ)வெப்ஸ்டார்ஸ் தேர்டு நியூ இன்டர்நேஷனல் ஈ) தமிழ்- பிரெஞ்சு கையதர முதலி

**விடை: இ)வெப்ஸ்டார்ஸ் தேர்டு நியூ இன்டர்நேஷனல்**

253. பழங்கதை, புராணம் என்பது

அ)கதை ஆ) பெருங்கதை இ) காப்பியம் ஈ) தொன்மம்

**விடை: ஈ) தொன்மம்**

254. திருவிளையாடற்புராணத்து சிவன், நக்கீரனைக் கொண்டு ‘விட்டகுறை’ என்ற சிறுகதை படைத்தவர்

அ) புதுமைப்பித்தன் ஆ)அழகிரிசாமி இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

**விடை: ஆ)அழகிரிசாமி**

255. தொன்மங்களைக் கொண்டு அரவாணன் புதினம் படைத்தவர்

அ) புதுமைப்பித்தன் ஆ) அழகிரிசாமி இ) ஜெயமோகன் ஈ)எஸ். இராமகிருஷ்ணன்

**விடை: ஈ)எஸ். இராமகிருஷ்ணன்**

256. ‘தொன்மை தானே சொல்லுங் காலை

உரையோடு புணர்ந்த பழமை மேற்றே’ - என்று எழுதியவர்

அ) அகத்தியர் ஆ) தொல்காப்பியர் இ) பவணந்தியார் ஈ) ஜயனாரிதனார்

**விடை: ஆ) தொல்காப்பியர்**

257. ‘முருகு உறழ் முன்பொடு

கடுஞ்சினம் செருக்கிப் பொருத யானை’ – என்று யானையையும் முருகனையும் இணைத்துக் கூறியிருக்கின்ற சங்க இலக்கிய நூல்

அ)குறுந்தொகை ஆ) நற்றிணை இ) ஜங்குறுநுறு ஈ)குறிஞ்சிப்பாட்டு

**விடை: ஆ) நற்றிணை**

**258.** பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க

அ)கர்ணன் தோற்றான் போ

ஆ)வயதில் சிறியவள் ஆனாலும் தலைவி

இ)இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு

ஈ) இந்த போறான் தருமன்

**விடை: ஈ) இந்த போறான் தருமன்**

259. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தெரிக.

அ)உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட வடிவங்கள்

ஆ)பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது

இ)நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள்,செய்திகள்

ஈ)விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளங்குவது

**விடை: ஈ)விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளங்குவது**

260. சாப விமோசனம், அகலிகை கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்

அ)கு.அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன் இ)ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

**விடை: ஆ) புதுமைப்பித்தன்**

261. பண்புக் குறியீடுகளைக் கதைமாந்தர்களோடு பொருத்துக.

அ) அறம்- 1.கர்ணன்

ஆ)வலிமை- 2.மனுநீதிச்சோழன்

இ)நீதி - 3.பீமன்

ஈ)வள்ளல் -- 4.தருமன்

அ)3,2,1,4 ஆ)4,3,2,1 இ)2,4,3,1 ஈ)4,3,2,1

**விடை: ஈ)4,3,2,1**

262. நம் இன வரலாற்றை இலக்கியம், தொல்லியல், கல்வெட்டு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தரவுகளைத் தேடி எழுதிய ஆளுமைகளில் முக்கியமானவர்

அ) பரிதிமாற் கலைஞர் ஆ) தேவநேயப்பாவாணர்
இ) மயிலை சீனி.வேங்கடசாமி ஈ) வ.சுப.மாணிக்கம்

**விடை: இ) மயிலை சீனி.வேங்கடசாமி**

263. தமிழ்ப்பற்று முன்னோர் வழியாக எனக்குக் கிடைத்த சீதனம் என்றவர்

அ)பரிதிமாற்கலைஞர் ஆ)தேவநேயப்பாவாணர்
இ) மயிலை சீனி.வேங்கடசாமி ஈ) வ.சுப.மாணிக்கனார்

**விடை: இ) மயிலை சீனி.வேங்கடசாமி**

264. மகேந்திரவர்மன் இயற்றிய நாடக நூல்

அ)நந்திவர்மன் ஆ) அஞ்சிறைத்தும்பி
இ)செந்தமிழ்ச் செல்வி ஈ)மத்த விலாசம்

**விடை: ஈ)மத்த விலாசம்**

265. சங்ககாலப் பசும்பூண் பாண்டியன் தன் கொடியில் கொண்டிருந்த சின்னம்

அ)புலி ஆ) வில் இ)மீன் ஈ)யானை

**விடை: ஈ)யானை**

**266. சு**கந்தி சுப்பிரமணியன் படைப்புகள்--என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதை

அ)கோடைமழை ஆ)சிறுபாணாற்றுப்படை
இ)அதிசயமலர் ஈ)முகம்

**விடை: ஈ)முகம்**

**267. நா**ன் வெற்றவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைக் தேடியபடி—என்ற சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது

அ)தமது வீட்டு முகவரியை ஆ)தமது குடும்பத்தை
இ)தமது அடையாளத்தை ஈ)தமது படைப்புகளை

**விடை: ஈ)தமது படைப்புகளை**

268. புதையுண்ட வாழ்க்கை, மீண்டெழுதலின் ரகசியம் ஆகிய இரு கவிதைத் தொகுப்புகளைப் படைத்தவர்

அ)பூமணி ஆ) கோதைநாயகி
இ)சுகந்தி சுப்பிரமணியன் ஈ)தமிழ் நதி

**விடை: இ) சுகந்தி சுப்பிரமணியன்**

269. ‘பில்கிரிம்ஸ் பிராகிரஸ்’ என்ற ஆங்கில நூலை எழுதியவர்

அ)எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை ஆ)சுகந்தி சுப்பிரமணியன்
இ)ஜான்பன்யன் ஈ) தேவநேயப்பாவாணர்

**விடை: இ)ஜான்பன்யன்**

270. ‘பில்கிரிம்ஸ் பிராகிரஸ்’-என்னும் ஆங்கில நூலின் தழுவல்

அ)போற்றித்திருவகவல் ஆ)இரட்சணிய யாத்ரிகம்
இ)இரட்சணய மனோகரம் ஈ) இரட்சணிய குறள்

**விடை: ஆ)இரட்சணிய யாத்ரிகம்**

271. இரட்சணிய யாத்ரிகம் எத்தனைப் பருவங்களைக் கொண்டது

அ)4 ஆ)6 இ)5 ஈ)2

**விடை: இ)5**

**272. இ**த்தனைக் கொடுமைகளுக்குப் பிறகும் இது பிளந்து வெடிக்கவில்லையே! இது என்னே! என்று கூறியவர்

அ)இயேசுபிரான் ஆ) எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை இ)முரடர்கள் ஈ)மக்கள்

**விடை: ஈ)மக்கள்**

273. சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர்

அ)கம்பர் ஆ)நல்லூர் நத்தத்தனார் இ)ஔவையார் ஈ) கபிலர்

**விடை: ஆ)நல்லூர் நத்தத்தனார்**

**274**. எயிற்பட்டினம் என்பதன் வேறு பெயர்

அ)உப்புவேலூர் ஆ)மரக்காணம் இ) நல்லூர் ஈ)திண்டிவனம்

**விடை: ஆ)மரக்காணம்**

275. கிடங்கில் என்பதன் தற்போதைய பெயர்

அ)நல்லூர் ஆ)மரக்காணம் இ)உப்புவேலூர் ஈ)திண்டிவனம்

**விடை: ஈ)திண்டிவனம்**

## II.இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழன் துணை வேண்டும் என்கிறார்?

**தமிழின் துணை:**

தினமும் உடல் வருத்தி உழைப்பதால், சிவந்த கைகளை உடைய தொழிலாளரின் தோள் மீது காணப்படும் முத்துப் போன்ற உழைப்பின் பெருமையை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் சிற்பி.

2. கவிஞர் சிற்பி எத்தனை முறைச் சாகித்திய அகாதெமி விருது பெற்றார்?

சாகித்திய அகாதெமி விருது: ( இரண்டு முறை)

- மொழிப்பெயர்ப்புக்காகவும் (அக்கினிசாட்சி)
- ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலிற்காகவும் இரு முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.

3. தமிழ் மொழியின் பழைமை நலம் எவை?

தமிழ்மொழி பாண்டியனின் அவையில் செம்மொழியாய் ஆட்சி செய்தது.

பாரி போன்ற வள்ளல்கள் பலரைத் தமிழ் மண்ணிற்குத் தந்தது.

4. நடை அழகியல் பற்றி தொல்காப்பியர் கூறும் கருத்தைக் குறிப்பிடுக?

நடைபெற்றியலும் (கிளவி--26)

கவிதையின் இயங்காற்றல்தான் நடை (தொல்)

ஆசிரிய நடைத்தே வஞ்சி –ஏனை

- வெண்பா நடைத்தே கலி – செய்--107

5. ஒலிப்பின்னல் என்றால் என்ன?

இசையோடும் இசைகருவியோடும்தான் மொழி சார்ந்த கவிதைப் பிறக்கிறது.

ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வதை ஒலிப்பின்னல் என்கிறோம்.

6) அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் நூல்கள் யாவை?

- தண்டியலங்காரம்
- மாறனலங்காரம்
- குவலயானந்தம்

7) அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?

- தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம்.

8) பொருள் வேற்றுமை அணி – விளக்கம் தருக.

- இரு வேறு பொருள்களின் ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி ஆகும்.

9) எவ்வாறு எழுதினால் பிழைகளைத் தவிர்க்கலாம்?

- மொழியின் இயல்பை உணர்த்தும், இலக்கண விதிகளை அறிந்தும் கவனமுடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும்.
- சொல் உருவாகும் முறையை அறிந்தும் பொருள் வேறுபாட்டை உணர்ந்தும் எழுதும் போது பிழைகளைத் தவிர்க்க முடியும்.

10) பசுமைக்குடில் வாயுக்கள் என்பவை யாவை?

- கார்பன் - டை- ஆக்சைடு
- மீத்தேன்
- நைட்ரஸ் ஆக்சைடு
- ஓசோன்
- நீர்வாயு

11) கார்பன் அற்ற ஆற்றல்கள் யாவை?

கார்பன் அற்ற ஆற்றல்கள்:

- சூரிய ஆற்றல்
- காற்று ஆற்றல்
- ஹைட்ரஜன் ஆற்றல்
- தாவர ஆற்றல்

12) புவி வெப்பமடைவதற்கு காரணம் யாது?

- மனிதனின் பேராசை காரணமாக, இயற்கை வளங்களைக் கடுமையாக சேதப்படுத்தினான்.
- புவி வெப்பமடைதல், ‘மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே’ என்று இங்கிலாந்து அறிவியலாளர் ‘டேவிட்கிங்’ திட்டவட்டமாகக் கூறுவதனால் தெளியலாம்.

13) நகரம் பட்டைத் தீட்டிய வெள்ளை வைரமாகிறது – விளக்கம் தருக.

- பெய்த மழையால் நகர மாசுகள் அகன்றன.
- மழைக்காலமாயினும் திடிரென வெளிப்பட்ட சூரிய வெளிச்சத்தால் புது பொலிவு பெறுகிறது.

எனவே நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாய் விளங்குகிறது

14) நெடுநல் வாடை – பிரித்துப் பொருள் தருக.

- நெடுநல்வாடை – நெடுமை + நன்மை + வாடை
- போர் பாசறையில் தங்கிய தலைவன் வெற்றி பெற

ஏதுவானதால் (நல்வாடை.)

- தலைவனைப் பிரிந்த தலைவிக்கு துன்பம் தருவதால் -(நெடுவாடை.)

எனவே நெடுநல்வாடை ஆயிற்று.

15) மொழியின் அடிப்படைப் பண்புகள் எவை? அவை எதற்கு உதவும்?

- திணை, பால், எண், இடம் ஆகியவை மொழியின் அடிப்படைப் பண்புகளாகும்.
- சொற்களை விளக்குவதற்கும், பயன்படுத்துவதற்கும் இவை உதவும்.

16) புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு வரைக.

- தற்காலிகத் தங்குமிடம் அல்லது தற்காலிகப் புகலிடம்

புக்கில் எனப்படும்.

- திருமணத்திற்குப்பின் கணவனும் மனைவியும்
- பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் தன்மனை எனப்படும்.

17) ‘மணந்தகம்’ என்றால் என்ன?

- குடும்பத்தின் தொடக்கமாகத் திருமணம் புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கமே மணந்தகம் எனப்படுகிறது.

18) சிலம்புகழி நோன்பு என்பது என்ன?

திருமணத்திற்குப்பின் மணப்பெண் கணவனுடைய இல்லத்திற்கு வரும்போது அவனுடைய தாய், பெண்ணிற்குப் பூச்சூட்டி, பழைய கன்னிச் சிலம்புகளைக் களைந்து, புதுச் சிலம்பு பூட்டுவது சிலம்புகழி நோன்பாகும்.

19) நிலையாமை குறித்துச் சவரி உரைக்கும் கருத்து யாது?

- இராமனைக் கண்டதால் தன் பொய்யான உலகப்பற்று அழிந்தது என்றும்.
- இவ்வளவு காலம் தான் மேற்கொண்டிருந்த தவம் பலித்துப் பிறவி ஒழிந்தது என்றும் கூறி, நிலையாமை குறித்த கருத்தை வெளிப்படுத்தினாள்.

20) அமலன் நேர்ந்த உரை யாது?

- உடன்வர விரும்பிய குகனைப் பார்த்து அமலன்இராமன், என் உயிர் போன்ற நீ என் இளவல், என் இளவல் இலக்குவன் உன் தம்பி,
  அழகிய நெற்றியையுடைய சீதை உன் அண்ணி,
- கடல் சூழ்ந்த உலகம் முழுமையும் உன்னுடையது.
- நான் உன் கட்டளைக்கு ஏற்ப பணிபுரிவேன் என்று உரைத்தான்.

21) ஞாலத்தின் மாணப் பெரிது எது?

- உரிய காலத்தில் செய்த உதவி, அளவில் சிறியதாக இருந்தாலும் உலகத்தை விட மிகப் பெரியதாகும்.

22) பாடாண் திணை- விளக்கம் தருக?

- பாடு+ஆண்+திணை = பாடாண்திணை
- பாடப்படும் ஆண் மகனின் ஒழுகலாற்றைப் பற்றி கூறுவதால் பாடாண்திணை என்றனாது.
- ஒருவருடைய புகழ், கொடை, சிறப்பு, அருள் முதலிய நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

23) சங்க காலத்தின் காலக்கண்ணாடியாக விளங்குவது புறநானூறு ஏன்?

**சங்க கால மக்களின் வாழ்க்கை:** வரலாறு,போர்,வீரம்,நாகரீகம்,பண்பாடு முதலியவற்றை விளக்கமாக எடுத்துக்காட்டுவதால் புறநானூறு சங்க காலத்தின் காலக்கண்ணாடியாக விளங்குகிறது.

24) இடையீடு – எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?

இடையீடு என்ற கவிதையானது கவிதை பற்றிய

- எண்ணம்
- வெளியீடு
- கேட்டல் ஆகிய குறியீடுகளைக் கொண்டு அமைந்துள்ளது.

25) அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

**தமிழில்,**

- நிகண்டு, நன்னூல், தண்டியலங்காரம், நீதிநூல்கள், காரிகை.

**கணிதத்தில்**,

- கீழ்வாயிலக்கம்
- மேல்வாயிலக்கம்
- குழிமாற்று

26) எழுத்தாணிகளின் பேதங்கள் யாவை?

ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பல வகைகள் உண்டு.

எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவர்.

**வகைகள்**:

மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என மூவகைப்படும்.

27) மறக்கக் கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?

**மறக்கக் கூடாதது:**

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை (உதவியை)

மறக்கக் கூடாது.

**மறக்கக் கூடியது**:

பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து

விடுவது நல்லது.

28) வசனம், கவிதை வேறுபாடு தருக.

- சொற்களைச் சிறந்த முறையில் அமைப்பது வசனம்.
- சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் அமைப்பது கவிதை.

29) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

'காலின் மெக்கன்சி'யின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869 -இல் உருவாக்கப்பட்ட இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள், தாள்சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

30) சென்னையில் பழைமையை நமக்கு உணர்த்துவன யாவை?

- இந்திய அகழ்வாய்வுத் துறையினரால் பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்கோடாரி.
- கூடுவாஞ்சேரி, பல்லாவரம்,புழல் போன்ற பகுதிகளில் இன்றும் கிடைக்கும் பழங்கால மானுட எச்சங்கள் சென்னையின் பழைமையை நமக்கு உணர்த்துகின்றன.

31) இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகைய உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

- இறைவனின் திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவு தனக்கு வேண்டும் என்கிறார் வள்ளலார்.

32) இறைவனிடம் வள்ளலார் தனக்கு வேண்டாம் என வேண்டுவன யாவை?

**வஞ்சகர் உறவு:**

- தன் மனதில் ஒன்றை நினைத்துக் கொண்டு வெளியில் வேறொன்றாகப் பேசும் வஞ்சகர்களின் உறவு தனக்கு வேண்டாம்
- பொய்,
- மதமான பேய்,
- பெண்ணாசை

இவையெல்லாம் தனக்கு வேண்டாம் என இறைவனிடம் வேண்டுகிறார்,

33) கலிவிழா,ஒலிவிழா – விளக்கம் தருக.

**கலிவிழா**:

- எழுச்சி தரும் விழா
- மக்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையில் கொண்டாடப்படும் விழா

**ஒலிவிழா**:

- ஆரவாரவிழா
- வாழ்த்துப்பாடல்களின் இசையும் ஆரவாரங்களோடு கொண்டாடும் விழா.

34) 'பெருங்கடல் வேட்டகத்துச் சிறுகுடிப் பரதவர்' - இத்தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.

**பெருங்கடல் x சிறுகுடி**

- பரப்பளவில் பெரிய கடலில் மீன் வேட்டையாடுபவர்.
- நிலப்பரப்பில் சிறிய குடியில் வாழ்வர்.

35) அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?

**மூன்று பிரிவுகள் உடையது. அவை**,

- களிற்றியானை நிரை – 120 பாடல்கள்
- மணிமிடைபவளம் - 180 பாடல்கள்
- நித்திலக் கோவை - 100 பாடல்கள்

36) படிமம் என்றால் என்ன?

**படிமம்**:

படிமம் என்றால் காட்சி என்பது பொருள்.

விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ

காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி படிமம்.

37) படிமம் எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?

**படிமம்**:

- வினை
- பயன்
- மெய்(வடிவம்)
- உரு(நிறம்) – ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

38) காப்பியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

காப்பியம் இரண்டு வகைப்படும்,அவை

1.பெருங்காப்பியம்

2.சிறுகாப்பியம்

39) காப்பியத்தைக் குறிக்கும் வேறுபெயர்கள் யாவை?

1.கதைச் செய்யுள்

2.மகா காவியம்

3.தொடர்நடைச் செய்யுள்

4.விருத்தச் செய்யுள்

40) காப்பியத்தின் சிற்றுருப்புகள் சிலவற்றை எழுதுக.

- காதை
- சருக்கம்
- இலம்பகம்
- படலம்

41) பாவிகம் -- விளக்குக.

- காப்பியத்தில் கவிஞன் வலியுறுத்த விரும்பும் அடிப்படைக் கருத்தினையே பாவிகம் என்பர்.
- காப்பியத்தின் பண்பாகப் ‘பாவிகம்’என்பதைத் தண்டியலங்காரம் குறிக்கின்றது.

42) மனத்தை அதன் போக்கில் செல்லவிடக் கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?

- தீமையில் இருந்து விலக்கி, நல்ல வழியில் செலுத்த, மனத்தை அது போகும் போக்கில் செல்லவிடாமல் காக்கவேண்டும் என வள்ளுவம் கூறுகிறது.

43) மன உறுதியின் தேவை பற்றித் திருக்குறள் யாது கூறுகிறது?

- நல்ல செயல்பாட்டிற்கு மன உறுதியே வேண்டும். மற்றவை எல்லாம் பயன்படாது.

44) பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

- பகைவராலும் அழிக்க முடியாத அரண் அறிவு ஆகும். ஏனெனில் அறிவு ஒருவனுக்கு அழிவு வராமல் காக்கும் கருவியாகும்.

45) அஞ்சத் தகுந்தன, அஞ்சத்தகாதன என வள்ளுவர் குறிப்பிடுவது யாது?

**அஞ்சத் தகுந்தன:** உறவுடையவர் போல் நடித்து உட்பகை கொண்டவரின் தொடர்புக்கு அஞ்சவேண்டும்.

**அஞ்சத் தகாதன:** வாளைப்போல் வெளிப்படையாகத் துன்பம் செய்யும் பகைவருக்கு அஞ்ச வேண்டியதில்லை.

46) வறுமையும் சிறுமையும் தருவது எது?

ஒருவருக்கு வறுமையும் சிறுமையும் தருவது சூது.

46) 'பருவத்தே பயிர் செய்'- நேர மேலாண்மைப் பொருத்தி எழுதுக.

ஏற்ற காலம் அறிந்து ஏற்ற இடத்தைத் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தாலும் கைகூடும் என்பதாகும்.

47) அறிவுடை வேந்தனின் நெறி குறித்து பிசிராந்தையார் கூறுவன யாவை?

அறிவுடை வேந்தன், மக்களிடம் வரி திரட்டும் நெறிமுறை அறிந்து வரியைத் திரட்டினால், நாடு பெருஞ்செல்வத்தைப் பெற்றுச் செழிப்படைவதோடு அவன் எண்ணமும் நிறைவேறும் எனப் பிசிராந்தையார் கூறுகிறார்.

48) செவியறிவுறூஉ துறையை விளக்குக.

அரசன் தவறுதலாகச் செயல்பட நேரும்போது செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யும் வகையில், அரசனுக்கு அறிவுரையாகக் கூறுவது "செவியறிவுறூஉத் துறையாகும்.

49) தொன்மம்-- விளக்கம் தருக.

கடவுளர்கள்,தேவர்கள்,மக்கள்,விலங்குகள் ஆகிய பல்வகை உயிரினங்களையும் ஒருங்கிணைத்து படித்தால் நம்ப முடியாதது போல் தோன்றுகின்ற செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் கொண்டு இயங்குகின்ற பழமையான கதைகளையே 'தொன்மம்' என்பர்

50) பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இரு தொடர்களை எழுதுக.

1.துரியோதனன் வருகிறான் 2. ஹிட்லர் செல்கிறான்.

51) குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.

- சுட்டிய பொருளுக்கும் குறியீட்டுப் பொருளுக்கும் ஏதேனும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும்.
- சுட்டும் பொருள் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றாக இருத்தல் வேண்டும்.

குறியீட்டுப்பொருள் நுண்ணிய முறையில் வெளிப்படுத்தபட வேண்டும்.

52) விரிபெரு தமிழர் மேன்மை

ஓங்கிடச் செய்வ தொன்றே

உயிர்ப்பணியாகக் கொண்டேன்-- யார், யாரைப்பற்றி, எதற்காகக் கூறுகிறார்?

கூறியவர் : பாரதிதாசன்

மயிலை சீனி. வேங்கடசாமி பற்றி கூறியுள்ளார். தமிழனத்திற்குத் தேவையான பல்வேறு ஆவணங்களைத் தொகுத்து ஆய்வு செய்யும் பணியை மேற்கொண்டதால் கூறியுள்ளார்.

# III.மனப்பாடப்பகுதி

**இயல் -1**

**தண்டியலங்காரம்**

**தன்னேர் இலாத தமிழ்**

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி

ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்

மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது

தன்னேர் இலாத தமிழ்!

பா : நேரிசை வெண்பா

**இயல் -2**

**நெடுநல்வாடை**

‘வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்

பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென

ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்

ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்

புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்

நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ

மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்

கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க,

பா : ஆசிரியப்பா

## இயல்-3

## கம்பராமாயணம்

### அயோத்தியா காண்டம் - குகப்படலம்

2.‘துன்பு உளதுஎனின் அன்றோ

சுகம் உளது? அது அன்றிப்

பின்பு உளது; இடை மன்னும்

பிரிவு உளது என உன்னேல்;

முன்பு உளெம் ஒரு நால்வேம்

முடிவு உளது என உன்னா

அன்பு உள, இனி, நாம் ஓர்

ஐவர்கள் உளர் ஆனோம்

பா : கலிவிருத்தம்

### யுத்த காண்டம் வீடணன் அடைக்கலப்படலம்

குகனோடும் ஐவர் ஆனேம்

முன்பு; பின் குன்று சூழ்வான்

மக னொடும் அறுவர் ஆனேம்;

எம்முழை அன்பின் வந்த

அகன் அமர் காதல் ஐய!

நின்னொடும் எழுவர் ஆனேம்;

புகல் அருங் கானம் தந்து,

புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

பா : அறுசீரக்கழிநடிலடி ஆசிரிய விருத்தம்

**திருக்குறள்**

**இல்வாழ்க்கை**

1. அன்பும்அறனும்உடைத்தாயின்இல்வாழ்க்கை

 பண்பும் பயனும் அது.

2. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்

 தெய்வத்துள் வைக்கப் படும்.

**செய்ந்நன்றி அறிதல்**

3. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்

 வானகமும் ஆற்ற லரிது.

8. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது

 அன்றே மறப்பது நன்று.

9 .எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை

 செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

**வெஃகாமை**

12. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை

 வேண்டும் பிறன்கைப் பொருள்.

**வெகுளாமை**

15. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

17. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

18. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**ஊழ்**

19. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

பா: குறள் வெண்பா

## இயல்-4

## இதில் வெற்றிபெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்

கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

பா : எண்சீர்க கழிநடிலடி ஆசிரிய விருத்தம்

**புறநானூறு**

**ஔவையார்**

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,

வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்

காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;

மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்

மழுவுடைக் காட்டகத்து அற்றே

எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.

பா : நேரிசை ஆசிரியப்பா

**இயல்-5**

**சதய்வமணிமாரல**

**இராமலிஙக அடிகள்**

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற

உத்தமர்தம் உறவுவேண்டும்

உள்ளொன்று வைத்து புறம்பொன்று பேசுவார்

உறவுகல வாமைவேண்டும்

பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்ம்மை

பேசா திருக்கவேண்டும்

பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்

பிடியா திருக்கவேண்டும்

பா : பனனிருசீர்க கழிசநடிலடி ஆசிரிய விருத்தம்

## இயல்-6

### சிலப்பதிகாரம்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்

தண்ணுமை நின்றது தகவே , தண்ணுமைப்

பின்வழி நின்றது முழவே, முழவொடு

கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை

பா : ஆசிரியப்பா

### திருக்குறள்

### அறிவு உடைமை

1. அறிவற்றம்காக்கும்கருவிசெறுவார்க்கும்

   உள்அழிக்கல் ஆகா அரண்.

3. எப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினும்அப்பொருள்

   மெய்ப்பொருள் காண்பது அறிவு.

4. எதிரதாக்காக்கும்அறிவினார்க்குஇல்லை

   அதிர வருவதோர் நோய்.

**சிற்றினம் சேராமை**

7. நல்லினத்தின்ஊங்கும்துணையில்லை; தீயினத்தின்

அல்லல் படுப்பதூஉம் இல்.

**வினைத்திட்பம்**

8. வினைத்திட்பம்என்பதுஒருவன்மனத்திட்பம்

மற்றைய எல்லாம் பிற.

9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்

சொல்லிய வண்ணம் செயல்.

11. உருவுகண்டுஎள்ளாமைவேண்டும்உருள்பெருந்தேர்க்கு

அச்சாணி அன்னார் உடைத்து.

**தூது**

12. கடன்அறிந்துகாலம்கருதிஇடன்அறிந்து

எண்ணி உரைப்பான் தலை.

**உட்பகை**

15. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக

கேள்போல் பகைவர் தொடர்பு.

**சூது**

20. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்

கழகத்துக் காலை புகின்.

பா: குறள் வெண்பா

**இயல்-7**

**புறநானூறு**

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;

மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;

நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,

வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;

பா : ஆசிரியப்பா

## இயல்-8

## இரட்சணிய யாத்திரிகம்

1. பாசம்என உன்னலிர் பிணித்தமை பகைத்த

நீசமனு மக்களை நினைந்து உருகும் அன்பின்

நேசம் எனும் வல்லியதை நீக்க வசம் இன்றி

ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்

2.பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி

ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற

வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்

நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

பா : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

## சிறுபாணாற்றுப்படை

எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்

விரிகடல் வேலி வியலகம் விளங்க

ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்,

பா : ஆசிரியப்பா

# IV.அணி இலக்கணம்

1. பொருள் வேற்றுமை அணி :

**அணி இலக்கணம்**

இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப்பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

**எ.கா :**

"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்

**அணிப்பொருத்தம் :**

தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன்சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி, அவற்றுள் தமிழ் தன்னேரில்லாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆயிற்று.

**2. நிரல்நிரை அணி :**

**அணி இலக்கணம் :**

**கவிஞர்** தான் கூறும் பொருள்களையும் வரிசைப்படுத்தி அதன் பயனையும் பொருளுக்கேற்றவாறு வரிசைப்படுத்திக கூறுவதே நிரல்நிரை அணியாகும்.

**சான்று** : " அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

**அணிப்பொருத்தம்** :

அன்பு, அறன் என்று முதலில் வரிசைப்படுத்தியவர் பின்னர் அன்புடைய வாழ்வு பண்புடையது என்னும் அறனுடைய வாழ்வு பயனுடையது என்றும் வரிசைப்படுத்திக் கூறியதால் இது நிரல்நரை அணி ஆயிற்று.

3. ஏகதேச உருவக அணி

**அணி இலக்கணம்** :

கவிஞர் தான் கூறும் பொருளில் ஒன்றை உருவகம் செய்து மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்.

**சான்று** : " சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்

ஏமப் புணையைச் சுடும்"

**அணிப்பொருத்தம்** :

கவிஞர் சினத்தை நெருப்பாக உருவகிக்காமல் இனத்தைத் தெப்பாக உருவகிப்பதால் இக்குறள் ஏகதேச உருவக அணியைச் சார்ந்ததாகும்.

4. **உவமை அணி** :

**அணி இலக்கணம்** :

உவமானம் ஒரு தொடராகவும், உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைய, இடையில் உவம உருபு வெளிப்பட வருவது உவமை அணியாகும்.

**சான்று** : " உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்

பாம்போடு உடன்உறைந் தற்று"

**அணிப்பொருத்தம்** :

**உவமானம் - குடங்கருள் பாம்போடு உடன்உறைதல்**

**உவமேயம் - உடம்பாடு இலாதவர் வாழ்க்கை**

**உவம உ**ருபு - அற்று

உடன்பாடு இல்லாதவருடன் வாழ்வது பாம்புடன் குடிசையில் வாழ்வது போன்றது.

யானை புக்க நிலம்போலத் தானும் உண்ணான் -

**புறநானூறு** – உவமை அணி

5. தொழில் உவமை அணி :

**அணி இலக்கணம்** :

ஒரு பொருளின் தொழில் அல்லது செயல்காரணமாக அமையும் உவமை தொழில் உவமை எனப்படும்.

**சான்று** : " அகலாது அணுகாது தீக்காய்வார் போலக்

இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்"

**அணிப்பொருத்தம்** :

தீயினை மூட்டிக் குளிர் கய்பவர் அகலாது அணுகாது இருப்பது போல் அரசர்களைச் சார்ந்திருப்பவர் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும், என தீக்காய்வோர்

செயலை அரசரைச் சார்ந்திருப்பவர் செயலுக்கு ஒப்புமை படுத்தியமையால் இது தொழில் உவமை அணி ஆயிற்று.

6. **எடுத்துக்காட்டு உவமை அணி** :

**அணி இலக்கணம்** :

உவமையையும் உவமேயத்தையும் இணைக்கின்ற உவமஉருபு மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமை அணி எனப்படும்.

**சான்று** : துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்

நஞ்சுஉண்பார் கள்உண் பவர்

**அணிப்பொருத்தம்** :

உவமை : துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர்

உவமஉருபு : (போல) மறைந்து வந்துள்ளது

உறங்கியவர், இறந்தவரைவிட வேறுபட்டவர் அல்லர். (அதுபோல)

கள்ளுண்பவரும் நஞ்சு உண்பவரே. இவ்வாறு உவமஉருபு மறைந்து வந்துள்ளமையால் இது எடுத்துக்காட்டு உவமை அணி ஆயிற்று.

7. **சொற்பொருள் பின்வரும் நிலையணி :**

**அணி இலக்கணம்** :

செய்யுளில் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து தந்த பொருளையே தருமாயின் அது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

**சான்று** :

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு

**அணிப்பொருத்தம்** :

இக்குறட்பாவில் ‘பொருள்’ என்ற சொல் அதேபொருளில் மீண்டும் மீண்டும் வருவதால் இது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆகும்.

“ எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்

திண்ணியர் ஆகப் பெறின்

- சொற்பொருள் பின்வரும் நிலையணி.

# V.திணை & துறைகள்

1. பாடாண் திணை :

**திணை விளக்கம்** :

பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறுகளைப் பற்றிக் கூறுவது பாடாண் திணையாகும். ஒருவருடைய புகழ் , வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**சான்று** : “வாயிலோயே வாயிலோயே……” எதை தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

திணைப்பொருத்தம் :

இப்பாடலின் அதியமான் நெடுமான் அஞ்சியின் அறிவார்ந்த சொற்களும் எண்ணியதை முடிக்கும் வலிமையும் வள்ளல்களின் சிறப்பை அறிந்து கொடையளிக்கும் தன்மையும் கூறப்பட்டதால் இப்பாடல் பாடாண் திணையைச் சார்ந்தாகும்.

2. **பரிசில்துறை :**

**துறை விளக்கம்** :

புலவர் அரசனின் சிறப்பையும் நாட்டின் சிறப்பையும் புகழ்ந்து பாடிய பின் பரிசில்வேண்டி வாயிலில் நிற்பது.

**சான்று** : “ வாயிலோயே வாயிலோயே….” எனத் தொடங்கும் புறநானூற்றுப்பாடல்

**துறை பொருத்தம்** :

அதியமான் நெடுமான் அஞ்சியின் நாட்டையும் அவனது புகழையும் பாடிய ஔவையார் பரிசிலுக்காகக் காத்திருந்த நிலையைக் கூறுவதால் இப்பாடல் பரிசில் துறையைச் சார்ந்ததாகும்.

3. **வாகைத் திணை :**

**திணை விளக்கம்** :

போரில் வெற்றி பெற்ற அரசனின் வெற்றியைச் சிறப்பிப்பது வாகைத் திணையாகும். வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவை சூடி மகிழ்வது வாகைத்திணையாகும்.

**சான்று** :

“வையகம் பனிப்ப” – எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடல்

**திணைப் பொருத்தம்** :

இப்பாடல் பாண்டியன் நெடுஞ்செழியனின் வெற்றிச் சிறப்புக்கள் பாடப்படுவதால் இது வாகைத் திணையாகும்.

4. **கூதிர்ப் பாசறைத் துறை :**

**துறை விளக்கம் :**

போா் மேற்சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கியிருக்கும் படைவீடு பற்றிக் கூறுவது கூதிர்ப்பாசறைத் துறையாகும்.

**சான்று** :

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
- நெடுநல்வாடை

**துறை விளக்கம்** :

போா் மேற்சென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் குளிர்காலத்தில் தங்கியிருந்த படைவீட்டின் குளிரின் தன்மையை பற்றி பாடியதால் இப்பாடல் கூதிர்ப் பாசறைத் துறையைச் சார்ந்ததாகும்.

# VI. மொழித்திறன் பயிற்சி (இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

1) வா- என்ற வேர்ச்சொல்லை வினைமுற்றாகவும் பெயரெச்சம், வினையெச்சமாகவும், வினையாலணையும் பெயராகவும் மாற்றுக.

**விடை:**

வா - வந்தான் (வினைமுற்று)
வா - வந்த (பெயரெச்சம்)
வா – வந்து (வினையெச்சம்)
வா - வந்தவர் (வினையாலணையும் பெயர்)

2) ஓடு – என்ற வேர்ச்சொல்லை வினைமுற்றாகவும் பெயரெச்சம், வினையெச்சமாகவும் வினையாலணையும் பெயராகவும் மாற்றி எழுதுக.

**விடை:**

ஓடு – ஓடினான் (வினைமுற்று)
ஓடு – ஓடிய (பெயரெச்சம்)
ஓடு – ஓடி (வினையெச்சம்)
ஓடு – ஓடியவன் (வினையாலணையும் பெயர்)

3) பேசு – என்ற வேர்ச்சொல்லை வினைமுற்றாக்கி, வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

**விடை**: பேசினாள் (வினைமுற்று)
கமலா பாபுவிடம் பேசினாள்.

4) பாடு – என்ற வேர்ச்சொல்லைப் பெயரெச்சமாக்கி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

**விடை**: பாடிய (பெயரெச்சம்)
மேடையில் பாடிய செல்வியை அனைவரும் பாராட்டினர்.

5) தா- என்ற வேர்ச்சொல்லை வினையெச்சமாக்கி, வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

**விடை**: தந்து – (வினையெச்சம்)
ஏழை மாணவிக்கு புத்தகம் தந்து உதவினான்.

6) கொடு – என்ற வேர்ச்சொல்லை வினையாலணையும் பெயராக்கி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

**விடை:** கொடுத்தவன் (வினையாலணையும் பெயர்)
வரையாது கொடுத்தவன் பாரிவள்ளல்.

7) மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

1)தலை,தளை, தழை

**விடை**: நாடு நலம் பெற இளைய தலைமுறையினரின் தளை களைந்து, அவர்களின் வாழ்வைத் தழைக்கச் செய்ய வேண்டும்.

2)கலை, களை, கழை

**விடை**: கலை அழகுடன் விளங்கும் வயலில் உள்ள களையை அகற்ற, கழையால் ஆன வேலியை அமைக்க வேண்டும்.

3) அலை, அளை, அழை

**விடை:** கடல் அலையின் அழகில் மயங்கிய கண்ணன் ராதையை அழைக்க, அளையில் இருந்த நண்டுகளும் எட்டிப்பார்த்தன.

4) விலை, விளை, விழை

**விடை:** கார் பருவத்தில் நன்றாக விளைந்ததால் தானியங்களின் விலை குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள விழைவதாக அரசு அறிவித்தது.

5) வலி, வளி, வழி

**விடை**: வளி அதிகமாக வீசியதால் வழியில் தவறி விழுந்து, காலில் அடிபட்டதால் வலி ஏற்பட்டது.

8)பிழையான தொடரைக் கண்டறிக.

அ)காளைகளைப் பூட்டி வயலை உழுதனன்.
ஆ)மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தான்.
இ)காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

**விடை**: இ)காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

9) பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

அ)அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.
ஆ)புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
இ)வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
ஈ)மயில்கள் விறலியரைப்போல் ஆடுகின்றன. **விடை**: அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்

10)முடிந்தால் தரலாம்: முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

**விடை**: 1) நம்மிடம் உள்ள பொருளை மற்றவர்க்கு கொடுக்க முடிந்தால் தரலாம்
2) ஒரு பகுதி வேலையை முடித்தால்

11) தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கோள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

**விடை**: தமிழ்மொழியின் இலக்கண விதிகளை அறிந்து கவனத்துடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும்.

12) மொழியின் சொற்றொடர் அமைப்பை விளக்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

விடை: திணை, பால், எண், இடம்

13) உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.

**விடை**: 1. மாணவர் வரிசையாக வந்தனர்
2. பெண்கள் கோவிலில் கூடினர்.

# VII. மொழித்திறன் பயிற்சிகள்:

**உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

1.என்னுடைய நம்பிக்கை முழுவதும் புதியத் தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

**விடை**: என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீதுதான்: அவர்கள் எல்லா**ப்** பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை**ப்** போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.

2.எத்தனைமுறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய், நிறைய தன்னிம்பிக்கை கொள்.

**விடை** : எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி**ச்** செல்வதனை**க்** கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி**த்** துன்புறுவாய் நிறைய தன்னம்பிக்கை**க்** கொள்.

3. நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்துக் கவனம், அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்

**விடை**: நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை**ப்** பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்த கவனம் அறிவை**ப்** பெறுவதற்கும் வளர்ப்பதற்கும் அடிப்படை**த்** தேவையாகும்.

4. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக் கொள்ள வேண்டும் தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

**விடை**: மாணவர்கள் பெற்றோர்களை**த்** தமது நண்பர்களாகப் பாவித்து நட்பு கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை**ப்** பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையாவற்றை தெரிந்து கொண்டு அறியாமையினைள அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

**விடை**: ஆசிரியருக்கு**க்** கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை**த்** தெரிந்து கொண்டு அறியாமையினை அகற்றிப் பல நல்லனவற்றை**க்** கற்று**க்** கொடுக்கும்.

6. பாஞ்சாலிக் கண்ணனை பார்த்து கண்ணாக் காப்பாய் என்றுக் கூறினாள்.

**விடை**: பாஞ்சாலி கண்ணனை**ப்** பார்த்து**க்** கண்ணா காப்பாய் என்று கூறினாள்.

7. மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பானச் சேவைப் புரிந்துக் கொள்கையை நிலை நாட்டினான்.

**விடை**: மிகுந்த பொறுப்புடன் சிறப்பான சேவை புரிந்து கொள்கையை நிலை நாட்டினான்.

8.நீரோச் சோறோ எதுக் கிடைத்தாலும் உண்டுச் செல்வேன்.

**விடை**: நீரோ சோறோ எது கிடைத்தாலும் உண்டு செல்வேன்.

9. பிடித்த கதையை படித்த பின் சுருக்கி சொன்னான்.

**விடை**: பிடித்த கதையை**ப்** படித்த பின் சுருக்கி**ச்** சொன்னான்.

10. படித்ததை குறிப்பேட்டில் எழுதி பார்த்தால், உனக்கு தவறுகள் ஏற்படா.

**விடை**: படித்ததைக் குறிப்பேட்டில் எழுதிப் பார்த்தால், உனக்குத் தவறுகள் ஏற்படா.

# VIII.தொடர்களில் உள்ள பிழைநீக்கி எழுதுக.

1.நெர்பயிர்கள் மலைநீரில் மூள்கின.

**விடை** : நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

2.காலைகளைப் பூட்டி வயளை உழுதனர்

**விடை**: காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

3.நான் பார்த்தது அவைகள் அன்று.

**விடை**: நான் பார்த்தவை அவை அல்ல.

4.காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தது.

**விடை**: காட்டில் முயலும் ஆமையும் நட்பாயிருந்தன.

5.இடதுபக்கம் இருப்பது ஔவையார் சிலை அல்ல.

**விடை**: இடப்பக்கம் இருப்பது ஔவையார் சிலை அன்று.

6.செய்திகள் வாசிப்பது தமிழரசன்.

**விடை**: செய்திகள் வாசிப்பவர் தமிழரசன்.

7.தமிழக அணி போட்டியில் வென்றனர்.

**விடை**: தமிழக அணி போட்டியில் வென்றது.

8.சில வீரர்கள் நாட்டிற்காகத் தன் இன்னுயிர் ஈந்தனர்.

**விடை**: வீரர்கள் சிலர் நாட்டிற்காகத் தன் இன்னுயிர் ஈந்தனர்.

9.மதுரைக்கு அருகாமையில் இருப்பது காவிரி அல்ல.

**விடை;** மதுரைக்கு அருகில் இருப்பது காவிரி அன்று.

10.நான் கொடுத்த நூல் இதுவல்ல.

**விடை**: நான் கொடுத்த நூல் இதுவன்று.

# IX.பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

1.நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.

**விடை:** நிலத்தை உழ வேண்டும் அப்போதுதான் வயிறு நிறையும்.

2.அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.

**விடை**: அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவி இருக்க வேண்டியதுதானே.

3.வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்கே அழைத்துச் சென்றார்?

**விடை**: வீட்டருகில் விளையாடிய குழந்தையை அப்பா எங்கே அழைத்துச் சென்றார்?

4.புள்ளைக்க உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.

**விடை** : பிள்ளைக்கு உடம்பு சரியில்லை மூன்று நாள்களாக சிரமப்படுகிறான்.

5.ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.

**விடை**: இரவுக்கு சிற்றப்பாவைக் காவலுக்குப் போகச் சொல்.

6.இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ.

**விடை:** இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.

7.இது பளசா? புதுசா?

**விடை** :இது பழமையா? புதுமையா?

8. சித்த நாழி உட்காரு, இந்தா வந்திடறேன்.

**விடை**: சில நாழிகை உட்கார், இதோ வருகிறேன்.

9. ஆத்துல தண்ணி கலங்கலா போவுது.

**விடை**: ஆற்றில் தண்ணீர் கலங்கலாகப் போகிறது.

10. பசி வந்தா பத்தும் பறந்து பூடும்.

**விடை**: பசி வந்தால் பத்தும் பறந்துவிடும்.

# X.பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற்களை எழுதுக.

1.அகங்காரம் - செருக்கு

2.ஆராதனை – வழிபாடு

3.உற்சாகம் - ஊக்கம்

4.கீர்த்தனை -பாமாலை

5.சந்தேகம் - ஐயம்

6.கருமம் - செயல்

7.உத்தரவு- கட்டளை

8.ஆலோசனை-அறிவுரை

9.ஆனந்தம் - மகிழ்ச்சி

10.அபிஷேகம்- திருமுழக்கு

11.அவசரம்- விரைவு

12.அனுபவம்- பட்டறிவு

13.ஆரம்பம்- தொடக்கம்

14.அலட்சியம்- புறக்கணிப்பு

15.அர்த்தம்- பொருள்

16.அபிப்பிராயம்- கருத்து

17.இஷ்டம்- விருப்பம்

18.கஷ்டம்- துன்பம்

19.சத்தம் - ஓசை

20.உல்லாசம்- களிப்பு

# XI.கலைச்சொற்கள்

1. Subscription- உறுப்பினர் கட்டணம்
2. Archive- ஆவணம்
3. Fiction- புனைவு
4. Biography- வாழ்க்கை வரலாறு
5. Manuscript- கையெழுத்துப் பிரதி
6. Bibilography- நிரல் நூல்
7. Platform- நடைமேடை
8. Train track- இருப்புப்பாதை
9. Railway Signal- தொடர் வண்டி

10. Ticket Inspector- பயணச்சீட்டு ஆய்வாளர்
11. Level Crossing- இருப்புப்பாதையைக் கடக்குமிடம்
12. Metro Train- மாநகரத் தொடர்வண்டி
13. Lobby- ஓய்வறை
14. Checkout- வெளியேறுதல்
15. Tips- சிற்றீகை
16. Minimeals- சிற்றுணவு
17. Arrival- வருகை
18. Departure- புறப்பாடு
19. Conveyor Belt- ஊர்திப்பட்டை
20. Take off- வானூர்தி கிளம்புதல்
21. Passport- கடவுச்சீட்டு
22. Visa- நுழைவு இசைவு
23. Domestic Flight- உள்நாட்டு வானூர்தி
24. Affidavit- ஆணை உறுதி ஆவணம்
25. Allegation- சாட்டுரை
26. Conviction- தண்டனை
27. Jurisdiction- அதிகார எல்லை
28. Plaintiff- வாதி
29. Artist- கவின்கலைஞர்
30. Cinematography- ஒளிப்பதிவு
31. Animation- இயங்கு படம்
32. Sound Effect- ஒலிப்பதிவு
33. Newsread- செய்திப்படம்
34. Multiplex Complex- ஒருங்கிணைந்த திரையரங்க வளாகம்

# XII.இலக்கணக்குறிப்பு

1. செம்பரிதி – பண்புத்தொகை
2. செந்நிறம் - பண்புத்தொகை
3. முத்துமுத்தாய்- அடுக்குத்தொடர்
4. வியர்வை வெள்ளம் - உருவகம்
5. ஊயர்ந்தோர் - வினையாலணையும் பெயர்
6. வெங்கதிர் - பண்புத்தொகை
7. வளைஇ- சொல்லிசை அளபெடை
8. அடையா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
9. பொய்யா - ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

10.மறவா- ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்

11.புதுப்பெயல்- பண்புத்தொகை

12.கொடுங்கோல்-பண்புத்தொகை

13.மாதவம்- உரிச்சொல்தொடர்

14.தாழ்கடல்- வினைத்தொகை

15.வயங்குமொழி- வினைத்தொகை

16.ஆடலும் பாடலும்- எண்ணும்மை

17.அறிவும் புகழும்- எண்ணும்மை

18.சிறாஅர் -இசைநிறை அளபெடை

19.வளர்தலம்- வினைத்தொகை

20.மலரடி- உவமைத்தொகை

21.தொல்நெறி – பண்புத்தொகை

22.நகை, அழுகை,

இளிவரல்,மருட்கை,

அச்சம்,பெருமிதம்,

வெகுளி,

உவகை -- தொழிற்பெயர்

23.காய்நெல்- வினைத்தொகை

24.திருந்திய- பெயரெச்சம்

25.சினந்து- வினையெச்சம்

26.பாதகர்- வினையாலணையும் பெயர்

27.ஊன்ற ஊன்ற – அடுக்குத்தொடர்

28.கருந்தடம்- பண்புத்தொகை

29.வெங்குருதி – பண்புத்தொகை

30.கவாஅன் - செய்யுளிசை அளபெடை

31.தடக்கை- உரிச்சொல் தொடர்

32.நன்மொழி- பண்புத்தொகை

33.கடல்தானை- உவமைத்தொகை

34.மலைதல்- தொழிற்பெயர்

35.விரிகடல் -- வினைத்தொகை

## XIII.இலக்கிய நயம் பாராட்டல்

**பின்வரும் பாடலைப் படித்து மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்களை விளக்குக.**

கனியிடை ஏறிய சுளையும்
    கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்
    பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும்- தென்னை
    நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் தமிழை
    என்னுயிர் என்பேன் கண்டீர்

**மையக்கருத்து**:

பலாச்சுளை, முற்றல் கரும்பு,

மலர்த்தேன்,காய்ச்சிய பாகு, நல்ல பசும்பால், தெங்கிளநீர் என்பன அனைத்தும் நாவால் சுவைக்கும்போது மட்டும் இனிமை தரும். ஆனால் நினைத்த அளவில், சொன்னஅளவில் இன்பம் தந்து, நம் உயிரையும் உணர்வையும் வளர்ப்பது தமிழே ‘உயிர்’ என்று போற்றியுள்ளார்.

**எதுகைத்தொடை**: சீர்தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

(எ.கா) கனியிடை – பனிமலர்

**மோனைத்தொடை** : சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.

(எ.கா) கனியிடை – கழையிடை

**இயைபுத் தொடை**: இறுதிச்சீர்களில் ஓசை ஒன்றிவருவது

(எ.கா) கழையிடை ஏறிய சாறும்
நல்கிய குளிரிள நீரும்

## XIV. பழமொழிகள் - தமிழாக்கம் தருக.

1) Learning is a treasure that will follow its owner everywhere

2) An artist lives everywhere.

3) Great Homer sometimes nods.

4) Knowledge of Languages is the doorway to wisdow.

5)Walls have ears.

6) Time and tide wait for none.

7) Work is worship.

8) East or west home is best.

9) Everybody before thinks alike.

10) Think before you speak.

11) Kindness cannot be bought.

12) An ideal teacher in a friend, Philosoper and guide of the students